30.11.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை: இன்று முதல் 5 நாட்களுக்கு கனமழை!



சென்னை:'வங்கக்கடலில், மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளதால், இன்று முதல், ஐந்து நாட்களுக்கு கனமழை நீடிக்கும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில், வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளது. இரண்டு வாரங்களுக்கும் மேலாக வெளுத்து வாங்கிய மழை, கடந்த சில நாட்களாக சற்று குறைந்துள்ள நிலையில், பல மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. இந்நிலையில், 'தமிழகம், புதுச்சேரியில், இன்று முதல், ஐந்து நாட்களுக்கு, கனமழை நீடிக்கும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. **இதுகுறித்து மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:**தென் மேற்கு வங்கக்கடலில், இலங்கை அருகே நிலை கொண்டிருந்த காற்றுஅழுத்தத் தாழ்வு நிலை, அதே இடத்தில் நீடிக்கிறது.அதே நேரத்தில், தென் கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதை ஒட்டிய தெற்கு அந்தமானில், புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது.இது, தமிழக கடல் பகுதிக்கு நகர்ந்து

வருவதால், அடுத்த, 24 மணி நேரத்தில், தமிழகம், புதுச்சேரியில், ஒரு சில இடங்களில் கன மழை பெய்யும். வட கடலோர மாவட்டங்களில், பல இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளது. சென்னையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மழை பெய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிலையில், 'தென் மேற்கு வங்கக்கடல் பகுதியில், இன்று, புதிதாக ஒரு, காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது; இதனால், டிசம்பர், 5ம் தேதி வரை, கனமழை தொடரும்' என, இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.நேற்று காலை, 8:30 மணி நிலவரப்படி, கன்னியாகுமரி - 4, பாபநாசம் - 3, காட்டுக்குப்பம், மாமல்லபுரம், செங்கோட்டை - 2 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.

## பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில் பாசிப்பயறு சாகுபடி பரப்பளவு குறைந்தது

பொள்ளாச்சி: உணவுக்கும், சருமத்தை காப்பதற்கும் பயன்படும் பாசிப்பயறு சாகுபடி பரப்பளவு குறைந்து வருகிறது. வறட்சியான, மானாவாரி நிலங்களில் வளரக்கூடியது பாசிப்பயறு, இது பச்சைப்

பயறு அல்லது சிறுபயறு எனவும் அழைக்கப்படுகிறது. இந்தியா, சீனா, கிழக்காசிய நாடுகளில், 90 சதவீதம் சாகுபடியாகிறது. மழையை நம்பிய மண்ணில்

தனிப்பயிராகவும், ஊடு பயிராகவும் இதன் சாகுபடி உள்ளது. இதில், புரதச்சத்து, மாவுப்பொருள், குறைந்த அளவு கொழுப்புச்சத்தும் கொண்டுள்ளது.

விவசாயிகள் அதிகபட்சமாக, அரை ஏக்கர் பரப்பளவில் தான் இதை பயிரிட்டு வருகின்றனர். உணவாக மட்டுமன்றி, மருத்துவத்துக்கும் அதிகமாக பயன்படுகிறது. முளைகட்டிய பாசிப்பயறு உடற்குறைப்பு சமச்சீர் உணவாக பயன்படுத்தப்படுகிறது. கொழுக்கட்டை, மோதகம், பொங்கல், பாயசம், கஞ்சி ஆகியன தயாரிக்க பாசிப்பயறு பயன்படுகிறது. தமிழர் திருநாளான பொங்கல் நாளன்று, சர்க்கரை பொங்கல் தயாரிக்கும்போது, அரிசி, வெல்லத்துடன் பாசி பயறும் சேர்க்கப்படுகிறது.

துவரம்பருப்புக்கு பதிலாக சில நேரங்களில் பாசிப்பருப்பு சாம்பார் தயாரிக்கப்படுகிறது. அரிசியும், சிறு பயறும் சேர்த்து கஞ்சியாக சமைக்கப்படுகிறது. இதுதவிர, முகத்தில் உள்ள அழுக்கை முற்றிலும் அகற்றி, முகத்தை பொலிவுடன் வைத்திருக்க இதன் மாவு பயன்படு கிறது. குளியல் சோப்புக்கு மாற்றாக இதை பெரும்பாலானோர் பயன்படுத்துகின்றனர்.பச்சைப்பயறுவில் கோ 4, கோ 6, விபிஎன்1, பிஓய் 1 ஆகிய ரகங்கள் புரட்டாசி பட்டத்தில் விதைக்கப்படுகிறது.

இத்தானியத்தில் பாஸ்பாரிக் அமிலம் அதிகளவில் உள்ளது. பருப்பு தவிர எஞ்சிய பாகங்கள் பசுந்தாள் உரமாகவும், கால்நடை தீவனமாகவும் பயன்படுகிறது. மானாவாரியில் எக்டருக்கு, 600 - 750 கிலோவும், இறவையில் 1,000 - 1,200 கிலோவும் மகசூல் கிடைக்கிறது. பொள்ளாச்சி, கிணத்துக்கடவு பகுதியில், தற்போது இதன் சாகுபடி பரப்பளவு, 40 - 50 எக்டராக குறைந்துள்ளது. நடப்பு ஆண்டில் பாசிப்பயறு மட்டுமல்லாது, பயறுவகைகளின் சாகுபடி பரப்பளவு அதிகரிக்கும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**குறைவுக்கு காரணம் என்ன?**

பாசிப்பயறு விதைப்பு பொள்ளாச்சி வடக்கு, கிணத்துக்கடவு, மதுக்கரை பகுதியில் குறைவாகவே நடக்கிறது. இதற்கு காரணம் சீதோஷ்ண நிலை தான். இப்பகுதியில் தட்டைப்பயறு சாகு படிக்கு ஏற்ற காலநிலை நிலவுவதால் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, தட்டைப்பயறு விளைச்சலில் மகசூல் அதிகமாக கிடைப்பதே இதற்கு காரணமாகும். மற்றபடி பாசிப்பயரில் மகசூலும் குறைவு தான் என விவசாயிகள் நம்புவதே, இப்பயறு விளைச்சல்பரப்பு குறைவாக உள்ளது. கோவை மாவட்டத்தில் அன்னுார், காரமடை பகுதிகளில் பாசிப்பயறு சாகுபடி அதிகம் என, பொள்ளாச்சி வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பஞ்சலிங்கம் அருவியில் சுற்றுலா பயணிகள் குஷி! 12 நாட்களுக்கு பின் அனுமதி



உடுமலை: திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவிக்குச்செல்ல, 12 நாட்களுக்குப்பின், நேற்றுமுன்தினம் முதல் அனுமதி வழங்கப்பட்டது; சுற்றுலா பயணிகள் அருவி யில் குளித்து மகிழ்ந்தனர்.

உடுமலை அருகே, மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது திருமூர்த்தி மலை. சிறந்த சுற்றுலாத்தலமான இப் பகுதிக்கு, உடுமலை மற்றும் சுற்றுப்புற பகுதிகள் மட்டுமின்றி, பல்வேறு மாவட்டங்கள், வெளி மாநிலத்தைச்சேர்ந்தவர்களும் அதிகளவில் வந்து செல்கின்றனர்.

திருமூர்த்திமலையில் திருமூர்த்தி அணை, படகுத்துறை, மீன் காட்சியகம், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று கடவுள்களும் ஒரே சன்னதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அமணலிங்கேஸ்வரர் கோவில் மற்றும் பஞ்சலிங்கம் அருவி உள்ளிட்டவை அமைந்துள்ளன. ஆண்டு முழுவதும் இப்பகுதிக்கு சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இவர்களுடன் அமணலிங்கேஸ்வரர் கோவிலுக்கு வரும் பக்தர்களும் அதிகம் இருப்பதால், தினமும் திருமூர்த்தி மலை பகுதியில் கூட்டம் அதிகம் காணப்படுகிறது. சுற்றுலா வருவோர் மற்றும் பக்தர்கள் கோவிலை ஒட்டியுள்ள மலைப்பகுதியில்,

900 மீ., உயரத்தில் வனப்பகுதியில் அமைந்துள்ள, பஞ்சலிங்க அருவியின் அழகை ரசிக்கவும், குளிக்கவும் செல்கின்றனர்.

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து, மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில், தொடர்மழை பெய்ததால், காட்டாறுகளில் இருந்து அருவிக்கு நீர் வரத்து அதிகரித்தது; திருமூர்த்தி அணைக்கு செல்லும் பாலாறிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது; அமணலிங்கேஸ்வரர் கோவிலை வெள்ளம் சூழ்ந்தது. மலைப்பகுதியில் பெய்த தொடர்மழை மற்றும் அருவியில் நீர்வரத்து அதிகம் இருந்ததால், கோவில் நிர்வாகம், சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, பஞ்சலிங்க அருவிக்கு செல்ல, நவ., 16 முதல் தடைவிதித்தது. இந்நிலையில், கடந்த இருநாட்களாக, மலைப்பகுதியில் மழை குறைந்ததால், அருவிக்கு வரும் நீரின் அளவும் குறைந்திருந்தது. இதையடுத்து, நேற்றுமுன்தினம் முதல், சுற்றுலா பயணிகள் அருவிக்குச்செல்ல அனுமதிக்கப்பட்டனர். கடந்த, 12 நாட்களுக்குப்பின், அருவிக்கு செல்ல அனுமதிக்கப்பட்டதால், சுற்றுலா வந்தோர் மற்றும் பக்தர்கள் அருவியில் குளித்து மகிழ்ந்தனர்.

**அருவிக்கு நீர்வரத்து அதிகரித்தால் தடை**

அமணலிங்கேஸ்வரர் கோவில் நிர்வாகத்தினர் கூறுகையில்,'இருநாட்களாக, மலைப்பகுதியில் மழை குறைந்துள்ளது; அருவிக்கு நீர்வரத்தும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. எனவே, அருவியில் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அருவி மற்றும் வழித்தடத்தில் அறநிலையத்துறை பணியாளர்கள் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணியில், ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்; நீர் வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் தடை விதிக்கப்படும்,' என்றனர்.

**உருவாகும் மக்கும் குப்பையை உரமாக்க.சோதனை முயற்சி! சுகாதார பணியிலும் இறங்கியது, ஸ்ரீபுரம்**

திருப்பூர்: மக்கும் குப்பையை உருவாகும் இடத்திலேயே சிதைத்து, உரமாக மாற்றும் திட்டத்தை துவக்க, திருப்பூர் ஸ்ரீபுரம் அறக்கட்டளை முடிவு செய்துள்ளது; இதற்கான சோதனை முயற்சி நடந்து வருகிறது.

ஆடை உற்பத்தியில் மட்டுமின்றி, நகர பாதுகாப்பு, இயற்கை வளம், சுகாதாரத்திலும் திருப்பூர் தொழில் துறையினர் சமீபகாலமாக ஆர்வம் காட்டி வருகின்றனர். மாநகர பகுதிகளில் தேங்கும் குப்பையை அகற்றுவது மாநகராட்சிக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது. மக்கும், மக்காத குப்பை கலப்பதால், தரம்பிரிக்க முடிவதில்லை. கொசு உற்பத்தி, சுகாதார பாதிப்புகளால், சேகரமாகும் குப்பையை பாறைக்குழிகளில் கொட்டுவதற்கும் மக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பி வருகிறது.

பெரும்பாலான பகுதிகளில், குப்பை அள்ளப்படாமலும், ரோட்டில் சிதறிக்கிடப்பதாலும், குடியிருப்பு பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது. சமூக சேவைக்காக தொழில் துறையினர், சமூக ஆர்வலர்களை ஒருங்கிணைத்து

உருவாக்கப்பட்ட ஸ்ரீபுரம் அறக்கட்டளை, நகர தூய்மை, மக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு, மக்கும் குப்பையை உரமாக்கும் திட்டத்தை செயல்படுத்த உள்ளது.நிறுவனங்களில் சேகரமாகும் மக்கும் குப்பையை சிதைக்கும் முறைக்கான வெள்ளோட்டம், செரீப் காலனியில் உள்ள தனியார் நிலத்தில், நடந்து வருகிறது. பெங்களூருவை சேர்ந்த நிறுவனத்திடம், கழிவுகளை சிதைக்கும் பாக்டீரியாக்கள் வாங்கப்பட்டுள்ளன. உரக்குழி அமைத்து, 25 கிலோ கோழி கழிவு, மீன் கழிவு கொட்டி, பாக்டீரியா துகள் தூவப்பட்டு, மாற்றங்கள் கண்காணிக்கப்படுகின்றன.

வீட்டுக்கழிவை வீட்டிலேயே உரமாக்க, பிரத்யேக பிளாஸ்டிக் டப்பா வாங்கப்பட்டுள்ளது. கழிவுகள் மீது, பாக்டீரியா துகள்களை அடுத்தடுத்த அடுக்குகளாக கொட்டி, உரம் தயாரிக்கப்படுகிறது. இச்சோதனை, அறக்கட்டளை நிறுவனர் ராமநாதன் வீட்டில், மேற்கொள்ளப் படுகிறது. மக்கும்

குப்பை, இரண்டு மாதங்களில், செடி, கொடிகள் வளர்ச்சிக்கு ஊட்டச்சத்து அளிக்கும் உரமாக மாறும் என, எதிர்பார்க்கப்படுகிறது. சோதனை முடிந்து, நிறை குறை கண்டறியப்பட்டதும், ஆடை உற்பத்தி நிறுவனங்கள், வீடுகள்தோறும் இம்முறையை கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது.

ராமநாதன் கூறுகையில், ""வீடுகளில் இருந்து, 70 சதவீதம் மக்கும் குப்பைகளே வெளியேறுகின்றன. கொசு உற்பத்தி, சுகாதாரக்கேடுகளுக்கு, மக்கும் குப்பைகளே காரணம். அவற்றை தரம்பிரித்து பெறுவது சவாலாக உள்ளது. நகர தூய்மையை உறுதி செய்வதற்காகவே, உரம் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்த உள்ளோம். ""பெங்களூருவில், இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுகிறது. இவ்வழிமுறையில், கழிவுகளை வீட்டில் வைத்திருப்பதால், எவ்வித துர்நாற்றமும்; சுகாதாரக்கேடும் ஏற்படாது. இரண்டு மாதத்தில், தரமான உரமாக மாறும். மக்கும் குப்பை வெளியேறுவதை குறைத்தாலே, மாநகரம் தூய்மையாகி விடும்," என்றார்.

**பெரியாறு வைகை பாசன விவசாயிகள் மகிழ்ச்சி:நீரை சிக்கனமாக பயன்படுத்த வலியுறுத்தல்**



மேலுார்:மேலுார் பகுதி பெரியாறு வைகை ஒரு போக பாசன பகுதி. அணையில் 6 ஆயிரம் மி.க., அடி இருந்தால், ஒரு போக சாகுபடிக்கு செப்.,15ல் தண்ணீர் திறக்க வேண்டும் என்பது விதி. அணையில் போதுமான நீர் இல்லாததால்,

இரண்டரை மாதம் கழித்து பாசனத்திற்கு நீர் திறந்து விடப்பட்டுள்ளது.பெரியாறு வைகை ஒரு போக பாசனத்திற்கு நேற்று முன்தினம் திறக்கப்பட்ட தண்ணீர், நேற்று மேலூரை வந்தடைந்தது.விவசாய சங்கத் தலைவர் முருகன் தலைமையில், பொருளாளர் ஜெயபால், செயலாளர் ரவி உள்ளிட்ட விவசாயிகள், நாவினிப்பட்டியில் உள்ள பெரியாற்று கால்வாயில் மலர்துாவி வரவேற்றனர். இனிப்பு கொடுத்து கொண்டாடினர்.

தற்போது பருவமழை பெய்யும் காலம் முடிவடைய உள்ளதாலும், இரண்டு மற்றும் ஒரு போகத்திற்கு ஒரே நேரத்தில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும் விவசாயிகள் குறுகிய கால நெல்ரகங்களை தேர்வு செய்து பயனடைய வேண்டும் என விவசாயிகள் சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், நீர் மறைய நீர் கட்டு(வயலில் ஒரு நேரத்தில் தண்ணீரை சேமித்து வைக்காமல், தேவைக்கு ஏற்ப நீர் உலர்ந்த பிறகு நீரை பாய்ச்சுவது) என்ற முறையில் தண்ணீரை வீணாக்காமல் சிக்கனமாக பாய்ச்சி பயனடைய வேண்டும் எனவும் வலியுறுத்தி உள்ளனர்.

**-மழைக்கு முன்பு ஒரு ரூபாய் மழைக்கு பின்பு ரூ.25 ஒரு கிலோ புடலை**

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் மழை பெய்வதற்கு முன்பு, கிலோ ரூ.1 க்கு கூட விற்காத புடலங்காய் மழைக்குப் பின் ரூ.25க்கு விற்றது.

ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் கடந்த சில நாட்களுக்கு முன்பு புடலை வரத்து பல மடங்கு அதிகரித்தது. ஒரு கிலோ புடலை ரூ. 1க்கும் கீழ் விற்றது. இந்த விலைக்குக் கூட வாங்க வியாபாரிகள் முன்வராததால் புடலை தேக்கம் அடைந்து காணப்பட்டது.

கடந்த நவ.13ல் இதன் விலை ரூ.3 ஆக உயர்ந்தது. தொடர்ந்து மழை பெய்து வந்ததால் புடலை கொடிகள் சேதமடைந்தன. வரத்து குறைந்ததால் விலை ஏறுமுகமாக காணப்பட்டது. தற்போது ஐயப்பசீசன், முகூர்த்தம் காரணமாக தேவையான அளவிற்கு காய்கறிகள் கிடைக்கவில்லை. வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கியதால் புடலை கிலோ ரூ.25க்கு விற்றது.

இதே போல் வெண்டைக்காய் ரூ26க்கும், சுரைக்காய் ரூ.15க்கும், பொரியல் தட்டைப்பயிறு ரூ.26க்கும் விற்றன. மேலும் மழை பெய்தால், இவற்றின் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### சிறுமலை மிளகு 'செம காரம்' விவசாயிகள் மகிழ்ச்சி



திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை மிளகுக்கு தேவை அதிகமாக இருப்பதாலும், விளைச்சல் அதிகரித்ததாலும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்தியாவில் பல இடங்களில் மிளகு விளைந்தாலும், சிறுமலை மிளகை வெளிநாட்டவர்கள் அதிகம் விரும்புகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் வாடல் நோயால் மிளகு பாதிக்கப்பட்டது. இதனால் விலை இல்லாமல் விவசாயிகள் விரக்தி அடைந்தனர்.
இந்த ஆண்டு மிளகு கொடிகள் பூக்கும் நிலை யில் மழை பெய்தது. இதனால் நோய் தாக்குதல் குறைந்து நல்ல விளைச்சல் கண்டுள்ளது.அதே நேரம் பல வடமாவட்டங்களிலும், கேரளாவிலும் பூச்சி தாக்குதலால் மிளகு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு ஒரு கிலோ ரூ.740க்கு விற்றது. இந்த ஆண்டு விலை மேலும் உயரும் என்ற நம்பிக்கை சிறுமலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.விவசாயி சுசீந்திரன் கூறியதாவது:

சிறுமலையில் மழையால், மிளகு காய்கள் பிடித்துள்ளது. மார்ச், ஏப்ரல், மேயில்தான் அறுவடை நடக்கும். பூச்சி தாக்குதலும் குறைந்துள்ளது. சில இடங்களில் வாடல் நோய் தாக்குதல் உள்ளது. இவற்றிற்கு மருந்து தெளித்தால் சரியாகிவிடும், என்றார்.

## 'பீன்ஸ்' விலை உயர்வு

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் மழையால் பீன்ஸ் வரத்து குறைந்து, விலை அதிகரித்துள்ளது.திண்டுக்கல்லில் 600 ஏக்கரில் பீன்ஸ் சாகுபடியாகிறது. வெளி மாநிலங்களில் இருந்து விற்பனைக்காக உள்ளூர் சந்தைக்கு தினமும் 400 கிலோ முதல் 500 கிலோ வரை பீன்ஸ் வந்தது.

கடந்த சில நாட்களாக பெய்த மழையால் தற்போது 100 கிலோவுக்கும் குறைவாக விற்பனைக்கு வருகிறது. கிலோ ரூ.30 முதல் ரூ45 வரை விற்பனையான பீன்ஸ். கடந்த சில நாட்களாக ரூ.80 க்கு விற்றது. நேற்று ரூ.85க்கு விற்பனையானது. விலையேற்றத்தால் பொதுமக்கள் குறைந்த அளவே வாங்கினர்.

## 37 டன் புல் வினியோகம்

வாலாஜாபாத்;காஞ்சிபுரம் மண்டலத்தில், கனமழையால் பாதிக்கப்பட்ட கறவை மாடுகளுக்கு, 37 டன் புல் கட்டுகளை, கால்நடை துறையினர் வினியோகம் செய்து உள்ளனர்.

காஞ்சிபுரம், உத்திரமேரூர், வாலாஜாபாத், ஸ்ரீபெரும்புதுார் ஆகிய ஒன்றியங்களில், கனமழையால் மேய்ச்சலுக்கு செல்ல முடியாமல், பாதிக்கப்பட்ட இலவச கறவை மாடுகள் மற்றும் வளர்ப்பு மாடுகளுக்கு, நேற்று, 37 டன் புல் கட்டுகளை, 740க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, கால்நடை துறையினர், நேற்று வினியோகம் செய்தனர்.

## பாலாற்று கருவேல மரங்கள்வெள்ளப்பெருக்கில் அழிப்பு

மாமல்லபுரம்;பாலாற்றில், சுற்றுச்சூழலை பாதித்த கருவேல மரங்கள், வெள்ளப்பெருக்கில் அழிக்கப்பட்டன.காஞ்சிபுரம் மாவட்டத்தில், பாலாறு

முக்கிய குடிநீர் ஆதாரமாக உள்ளது. கரையோர ஊராட்சிகள் மற்றும் செங்கல்பட்டு, மறைமலைநகர் உள்ளிட்ட பல்வேறு நகராட்சி பகுதிகளுக்கு, பாலாற்றிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.இந்நிலையில், மணல் குவாரிகளால், ஆற்றில் 30 அடி ஆழத்திற்கும் கீழே பள்ளம் தோண்டி, ஆறு

சீரழிந்தது. மழைநீர் தேங்காமல், நீமட்டம் அதலபாதாளத்திற்கு சென்றது.

ஆற்றில் ஆங்காங்கே கருவேல முட்புதர் அடர்ந்து, ஆற்றின் சுற்றுச்சூழலையும் கெடுத்தது. இத்தகைய அவலம் பல ஆண்டுகளாக நீடித்துவந்த நிலையில், தற்போது கனமழை பெய்து ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து செல்கிறது. வெள்ளம் குறைவாக இருந்தபோது மரக்கிளைகள் முறிந்தன. வெள்ளம் அதிகரித்தபோது, நீரோட்ட அழுத்தத்தால், பெரிய மரங்கள் தவிர்த்து, குறுமரங்கள் வேரோடு முறிக்கப்பட்டு, நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

**நிலவேம்பு கஷாயம் வழங்கல் சின்னசேலம்**

சின்னசேலம்: சின்னசேலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது.

சின்னசேலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், மழைக்கால சிறப்பு சித்த மருத்துவ முகாம் கடந்த, 25ம் தேதி முதல் நடக்கிறது. முகாமில், நாள் தோறும் 500 பேருக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கப்படுகிறது. நிலவேம்பு கஷாயம் நோய் எதிர்ப்பு சக்தியாகவும், உடல்வலி, காய்ச்சல் மற்றும் தலைவலிக்கு மருந்தாகவும் பயன்படுவதால் பொது மக்கள் ஆர்வமுடன் வாங்கி சாப்பிடுகின்றனர். முகாமில் சித்த மருத்துவர்கள் சித்ரா, பிரதீப்குமார் மற்றும் சுகாதாரத் துறையினர் கலந்து கொண்டனர்.

**திண்டிவனம் பகுதியில் 49 ஏரிகள் நிரம்பின**

திண்டிவனம்: திண்டிவனம் தாலுகாவில், 49 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் முழுவதும், கடந்த சில நாட்களாக பலத்த மழை பெ#தது. திண்டிவனம் தாலுகா, ஒலக்கூர் ஒன்றியத்திலுள்ள 66 ஏரிகளில், 49 ஏரிகள், கன மழையால் நிரப்பியுள்ளன.

இது குறித்து திண்டிவனம் ஊரக வளர்ச்சி துறை அதிகாரிகள் கூறுகையில், ஒலக்கூர் ஒன்றிய பகுதியில் 52 கிராமங்கள் உள்ளன. இதிலுள்ள 66 ஏரிகளில் கீழ் மாவிலங்கை, கொடியம், வெள்ளி@மடு @பட்டை, வட சிறுவலூர், öŒம்பாக்கம், ஆட்சிப்பாக்கம் உள்ளிட்ட 49 ஏரிகள் முழுவதும் நிரம்பியுள்ளன. @மலும், மழை நீடித்தால், முன்னெச்Œரிக்கை நடவடிக்கையும் முடுக்கி விடப்பட்டுள்ளது என்றனர்.

**மழையால் பாதித்தவர்களுக்கு நிவாரண உதவி**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் மழையால் பாதித்தவர்களுக்கு நிவாரண உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

கள்ளக்குறிச்சி பகுதியில், கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த வடகிழக்கு பருவ மழையில் 68 வீடுகள், 2 மாட்டு கொட்டகை சேதமடைந்தது. ஆறு கால்நடைகள் இறந்தன. இவற்றிற்கான நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சி, கள்ளக்குறிச்சி தாலுகா அலுவலகத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் லட்சுமி தலைமை தாங்கினார். அழகுவேலுபாபு எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளர் தண்டபாணி முன்னிலை வகித்தனர்.

அமைச்சர் மோகன், 76 குடும்பத்திற்கு, 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நிவாரண உதவிகள் வழங்கினார். சேர்மன்கள் பாலகிருஷ்ணன், ராஜசேகர், அரசு, ராஜேந்திரன், தாசில்தார் சையத்காதர், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் பாபு, அரசு வக்கீல் சீனுவாசன், சி.எம்.எஸ்., தலைவர் பச்சையாப்பிள்ளை, தலைமையிடத்து துணை தாசில்தார் கமலக்கண்ணன், மண்டல துணை தாசில்தார் நடராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருந்திய நெல் சாகுபடி முறை: அதிக மகசூலால் விவசாயிகள் ஆர்வம்

ஆத்தூர்: ஆத்தூர் பகுதி விவசாயிகள், அதிக மகசூல் பெற, திருந்திய நெல் சாகுபடி முறையில், நடவு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி சுற்றுவட்டார பகுதிகளில், வட கிழக்கு பருவ மழை கணிசமான அளவில் பெய்ததால், நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. எனவே, நெல் சாகுபடி பணியில், விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். வேளாண்துறை மூலம், வீரிய ஒட்டு ரக நெல் விதை, ஏ.டி.டி., 45 போன்ற நெல் விதைகள், விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குகின்றனர்.

இதுகுறித்து, அரசநத்தம் விவசாயி வளர்வேல் கூறியதாவது: ஒரு ஏக்கருக்கு, 25 கிலோ விதை நெல் நாற்று விடப்பட்டு, வழக்கமான முறையில், நடவு பணிகள் மேற்கொண்டால், ஏக்கருக்கு, 30 மூட்டை நெல் விளைச்சல் இருக்கும். எலி மற்றும் களைச் செடிகளால், மகசூல் பாதிப்பு ஏற்படும். திருந்திய நெல் சாகுபடி முறையில், ஏக்கருக்கு, 12 கிலோ விதை நெல் நாற்று விட்டு, 20 முதல், 30 நாள் கொண்ட நாற்றுகளை பிடுங்கி, உழுது தயார் நிலையில் உள்ள நிலத்தில், நடவு செய்யப்படுகிறது. இதில், 90 நாளில், ஏக்கருக்கு, 35 முதல், 40 மூட்டை மகசூல் கிடைக்கிறது. வரிசையாக நடவு செய்வதால், எலி, களைச் செடிகள் பிரச்னை குறைவு. குறைந்த செலவில் அதிக மகசூல் பெற, திருந்திய நெல் சாகுபடி முறை வழிவகுக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## இயற்கையை காப்போம் விழிப்புணர்வு பேரணி

சேலம்: சேலம் மறைமாவட்டம் சார்பில், துறவியர் ஆண்டு நிறைவையொட்டி, நடந்த இயற்கையை காப்போம் விழப்புணர்வு பேரணியில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர். சேலம் மறைமாவட்டம் சார்பில், துறவியர் ஆண்டு நிறைவையொட்டி, நடந்த இயற்கையை காப்போம் விழப்புணர்வு பேரணி, நான்கு ரோடு லிட்டில் பிளவர் மேல்நிலைப்பள்ளியில் துவங்கி, குழந்தை ஏசு பேராலயத்தில் முடி வடைந்தது. பேரணியில், பள்ளி மாணவ, மாணவிகள், மறை மாவட்ட ஆயர்கள், போதகர்கள், கன்னியாஸ்திரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். கொட்டும் மழையில், குடைகளை

பிடித்தபடி கலந்து கொண்ட பொதுமக்கள், இயற்கையை காப்போம் என்பதை வலியுறுத்தி, விழிப்புணர்வு வாசகங்களை கொண்ட, பதாகைகளை ஏந்தி வந்தனர்.

**சீமை கருவேல மரம் அகற்றும் திட்டம்: வனத்துறை டெண்டர் வைத்தும் கோர ஆளில்லை**

எலச்சிப்பாளையம்: அகரம் ஏரியில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்ற, ஆறு லட்சம் ரூபாய்க்கு வனத்துறையினர் டெண்டர் வைத்தும், விலை அதிகம் என்பதால், யாரும் டெண்டர் கோர முன் வராததால், திட்டம் முடங்கி உள்ளது.

திருச்செங்கோடு அடுத்த, எலச்சிப்பாளையம் யூனியன், அகரம் பஞ்சாயத்திற்கு உட்பட்ட, அகரம் ஏரி, 10 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. இந்த ஏரி நிரம்பும் போது, சுற்று வட்டாரத்தில் நிலத்தடி நீர் உயர்வதுடன், விவசாய கிணறுகளில் தண்ணீர் அதிகரித்து பாசனத்துக்கு போதுமானதாக இருந்தது. அவற்றை பயன்படுத்தி அப்பகுதியில் பருத்தி, சோளம், மக்காசோளம், கரும்பு, பாசிப்பயிறு போன்றவை பயிரிடப்பட்டு சாகுபடி செய்து வருகின்றனர். இந்த ஏரிக்கு, திருமணி முத்தாற்றில் இருந்து ஆத்துமேடு வழியாக, நீர்வரத்து வருவது வழக்கம்.
ரூ. 6 லட்சம் டெண்டர்: தற்போது, தொடர் மழை பெய்தும், ஏரிக்கு வரும் வரத்து வாய்க்கால் ஆக்கிரமிப்பு காரணமாகவும், சீமை கருவேல மரம் அதிக அளவில் படர்ந்துள்ளதாலும், தண்ணீர் இன்றி, ஏரி வறண்டு காணப்படுகிறது. அவற்றை கருத்தில் கொண்டு, ஏரியை தூர்வாரி, தண்ணீரை சேமித்து வைக்கும் நோக்கில், அங்குள்ள சீமைகருவேல முட்களை அகற்ற, கடந்த, மூன்று மாதத்துக்கு முன், மாவட்ட வனத்துறை சார்பில், டெண்டர் கோரப்பட்டது. அதற்காக, ஆறு லட்சம் ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், டெண்டரில் கான்ட்ராக்டர்கள் யாரும் பங்கேற்கவில்லை. காரணம், 'அவ்வளவு தொகைக்கு டெண்டர் எடுத்தால், லாபத்தை பார்க்க முடியாது. மாறாக நஷ்டத்தை சந்திக்க வேண்டும். அதனால், ஏலத்தொகையை, மூன்று லட்சம் ரூபாயாக குறைக்க வேண்டும்' என, கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. ஆனால்,

மாவட்ட வனத்துறையினர், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் காரணமாக, ஏரியில் சீமை கருவேல மரங்களை அகற்றும் திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

எதிர்பார்த்த விலையில்லை: இதுகுறித்து பஞ்சாயத்து தலைவர் சக்திவேல் கூறியதாவது: இங்குள்ள ஏரியில் அதிக அளவில் சீமை கருவேல மரத்தால், ஏரியில் தண்ணீர் தேக்கம் இன்றி வறண்டு காணப்படுகிறது. அவற்றை கருத்தில் கொண்டு, மாவட்ட வனத்துறையினர், ஆறு லட்சம் ரூபாய் மதிப்பில் டெண்டர் விடப்பட்டது. ஆனால், தொகை அதிகம் என்பதால், யாரும் டெண்டர் கோர முன்வரவில்லை. தற்போதுள்ள சூழ்நிலையில், அவ்வளவு தொகைக்கு ஏலம் எடுத்தால், எதிர்பார்த்த விலை கிடைக்காது. நஷ்டத்தை சந்திக்க வேண்டும். பஞ்சாயத்து நிர்வாகத்திடம் வழங்கினால், நாங்கள் டெண்டர் விட்டு அகற்றிவிடுவோம். அதற்கு, மாவட்ட வனத்துறையினர், தடையில்லா சான்று வழங்கவில்லை. அல்லது அவர்களாவது சீமை கருவேல மரங்களை அகற்றிக் கொடுக்க வேண்டும். மழைக்காலங்களில் தண்ணீர் ஏரியில் தேங்கி நிற்கும் வகையில், மாவட்ட வனத்துறையினர் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## கிழக்குக்கரை வாய்க்கால் தண்ணீர்: மழை குறைந்ததால் மீண்டும் திறப்பு

குமாரபாளையம்: குமாரபாளையம் பகுதியில், மழை குறைந்ததால் கிழக்குக்கரை வாய்க்காலில், மீண்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மேட்டூர் கிழக்குக்கரை வாய்க்காலில், பாசன வசதிக்காக, கடந்த, ஜூலையில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. விவசாயிகள் தங்களது நிலங்களை பதப்படுத்தி, நெல் மற்றும் சோளம் பயிரிட்டனர். இந்நிலையில், கடந்த 15 நாட்களுக்கும் மேலாக. கடும் மழை பெய்தது. இதனால் விவசாயிகள் யாரும் வாய்க்கால் நீரை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதால், மேட்டூர் கிழக்குக்கரை வாய்க்கால் நீர் நிறுத்தப்பட்டது. தற்போது, சில நாட்களாக மழை குறைந்ததால், மீண்டும் மேட்டூர் கிழக்குக்கரை வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடப்பட்டு, மேற்படி

தண்ணீர் குமாரபாளையம் பகுதியை வந்தடைந்துள்ளது. இதனால், இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து, விவசாயி குழந்தைவேல் கூறியதாவது: மேட்டூர் கிழக்குக்கரை வாய்க்கால் நீரால், குமாரபாளையம் அருகே உள்ள கத்தேரி, தட்டான்குட்டை, வேமன்காட்டுவலசு, வீரப்பம்பாளையம், நல்லாம்பாளையம், குப்பாண்டபாளையம், குள்ளநாயக்கன்பாளையம், சாணார்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமப்புற பகுதிகளில், 5,000க்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தற்போது பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் வரும், தை மாதம் அறுவடை செய்யப்படும். மழை அதிகம் வந்ததால் வாய்க்கால் நீர், கடந்த சில நாட்களுக்கு முன் நிறுத்தப்பட்டு, தற்போது மழை குறைந்ததால் மீண்டும் மேட்டூர் கிழக்குக்கரை வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. எனவே, நெற்பயிர்களுக்கு தேவையான தண்ணீர் கிடைக்கும். மேலும் அதிக மகசூலும் கிடைக்கும். இதனால் இப்பகுதி விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

### சித்தா மருத்துவ பிரிவில் தினமும் நிலவேம்பு கஷாயம்

நாமகிரிப்பேட்டை: மழைகாலத்தில் பரவும் காய்ச்சலை தடுக்க, நாமகிரிப்பேட்டை சித்த மருத்துவ பிரிவில், தினமும் நிலவேம்பு கஷாயம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில், பருவமழை காலம் தொடங்கியதை அடுத்து தொற்றுநோய், வைரஸ் காய்ச்சல் ஆகியவை ஏற்படாமல் தடுக்க சுகாதாரத்துறை முழு வீச்சில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், சித்தா மருத்துவத்தில் வழங்கப்படும் நிலவேம்பு கஷாயம், பப்பாளி சாறு ஆகியவை மனிதர்களின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துவதால், இதை, அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் அனைவருக்கும் வழங்க, சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, வட்டார மருத்துவ அலுவலர் தயாசங்கர் கூறியதாவது: நாமகிரிப்பேட்டை ஆரம்ப சுகாதாரநிலையத்தில் உள்ள சித்தா பிரிவில் கடந்த, ஐந்து நாட்களாக நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது. அதேபோல், நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் உள்ள, மூன்று ஆரம்ப சுகாதர நிலையம், 21 துணை சுகாதாரநிலையங்களிலும் வழங்கப்பட்டுள்ளது. இதில், பலர் தினமும் தொடர்ச்சியாக வந்து நிலவேம்பு கஷாயம் குடித்துள்ளனர். இதனால், மழை காலம் முடியும் வரை நாமகிரிப்பேட்டையில் உள்ள சித்த மருத்துவ பிரிவில் தினமும் நிலவேம்பு கசாயம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் குழந்தைகள், வயதானவர்கள் குடிப்பதற்கு வசதியாக வீட்டிற்கு கொடுத்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

* ராசிபுரம் அரசு மருத்துவமனை சித்தா மருத்துவ பிரிவு சார்பில், நிலவேம்பு கஷாயம் வழங்கும் நிகழ்ச்சி மருத்துவமனை வளாகத்தில் நடந்தது. அரசு மருத்துவமனை டாக்டர் மைனாவதி தலைமை வகித்தார். சித்த மருத்துவர் மோகனசுந்தரம், பொதுமக்களுக்கு, நிலவேம்பு கஷாயம் வழங்கினார்.

**மரக்கன்று நடும் விழா**

மோகனூர்: மோகனூர் அடுத்த, வளையபட்டி கஸ்தூரி மலையில், மரக்கன்று நடும் விழா நடந்தது. கோவில் நிர்வாகி தங்கவேல் தலைமை வகித்தார். நாமக்கல் கிரீன்பார்க் கல்வி நிறுவன இயக்குனர் குருவாயூரப்பன் வரவேற்றார். பொதுமக்கள் தங்கள் நட்சத்திரங்களுக்குரிய மரக்கன்றுகளை நடவு செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை பசுமை, நாமக்கல் மக்கள் விழிப்புணர்வு இயக்கம் மற்றும் கோவை ராமகிருஷ்ணா மிஷன், அனைத்து வித்யாலயா முன்னாள் மாணவர்கள் சங்கத்தினர் செய்திருந்தனர்.

**வத்தல் மலையில் மண் சரிவை தடுக்க கற்றாழை நட யோசனை**

ர்மபுரி: 'வத்தல் மலையில், மண் சரிவு ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், கற்றாழை போன்ற தாவரங்களை நட வேண்டும்' என, பெரியார் பல்கலைக்கழக ஆய்வுக் குழுவினர் தெரிவித்தனர்.

பெரியார் பல்கலைக்கழக பேராசிரியரும், புவித் தகவலமைவு மையத்தின் இயக்குனருமான, அன்பழகன் தலைமையில், வத்தல் மலையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்து அவர் கூறியதாவது: வத்தல்மலையில் அதிகமாக உருமாறிய மண் வகை, நீரின் அடர்த்தி பெருக்கம், மண் அரிப்பு, பாறைகளின் சுமை காரணமாக மண் சரிவு ஏற்பட்டுள்ளது. தொடர் மழை, மண் சரிவு ஏற்பட மிகப்பெரிய காரணமாகும். வத்தல் மலையில் மண் சரிவு ஏற்படுவதற்கு, மண்ணின் தன்மை, புவிப்பொறியியல் காரணிகள், சரிவை தடுக்கும் முறைகள் தொடர்பான நீண்டகால ஆராய்ச்சிக்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேற்பரப்பு நீர், ஓடை நீர் மண்ணுக்குள் புகா வண்ணம் வடிகால் அமைக்க முடியுமானால், மண் சரிவை ஓரளவுக்கு தடுக்கலாம். மண் அரிப்பைத் தடுப்பதற்கு உடனடித் தேவையாக, கற்றாழை போன்ற தாவரங்களை மலைப் பாதையின் இருமருங்கிலும் பல அடி தொலைவுக்கு மேல் நடலாம். நீண்ட கால நடவடிக்கையாக, வேர்ப் பிடிப்பு உள்ள சிறிய வகை மரங்களை நடலாம். தடுப்புச் சுவர்கள் நீர் வடிகால் வடிவமைப்புடன் அமைப்பது சிறந்த முறையாகும். புவிப்பொறியியல் காரணிகளை, நன்கு ஆராய்ந்த பிறகு, மேலும் தீர்க்கமான தடுப்புத் திட்டங்களை வகுக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

## தரமான விதைகளை பயன்படுத்த அதிகாரிகள் அறிவுரை

கிருஷ்ணகிரி: நெல் சாகுபடியின் போது, தரமான விதைகளை பயன்படுத்தி, அதிக மகசூலை பெறலாம் என கிருஷ்ணகிரி விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண் அலுவலர் ஜான் லூர்து சேவியர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு, கிருஷ்ணகிரி அணையின் மூலம் பாசனம் பெறும் பகுதிகளில், நெல் நாற்றங்கால் தயார் செய்யும் பணி நடந்து வருகிறது. விவசாயிகள் தரமான விதைகளை தேர்வு செய்து சாகுபடி செய்யவேண்டும். விதை விவர அட்டையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை சரி பார்த்து, விதைகளை வாங்க வேண்டும். அதில் காணப்படும் பயிரிட உகந்த பருவம் மற்றும் பயிரிட உகந்த மாநிலம் ஆகிய விவரங்களை சரி பார்க்க வேண்டும். விதைகளின் தரத்தை

அறிந்து கொள்ள, ஒருங்கிணைந்த வேளாண்மை அலுவலக கட்டடத்தில் செயல்பட்டு வரும், விதை பரிசோதனை நிலையத்திற்கு விதை மாதிரிகள் அனுப்பி வைத்து தரத்தை அறிந்து கொள்ளலாம். ஒரு விதை மாதிரிக்கு, பரிசோதனை கட்டணமாக, 30 ரூபாய் செலுத்தி, விதைகளின் தரத்தை அறிந்து கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5 நாட்களுக்குப் பின் மாநகரில் மாமழை

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் கடந்த, 1ம் தேதி முதல் தொடர்ந்து வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதனால், மாவட்ட அளவில் பெரிய அளவில், சேதம் ஏற்படவில்லை. பெரும்பாலான குளம், ஏரிகள் நிரம்பியும், லேசான வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டது. இருப்பினும், கடந்த, 24ம் தேதி முதல் மழை பெய்யவில்லை. சில நேரம் வானம் மேக மூட்டமாக காணப்பட்டாலும், மழை இல்லை. இந்நிலையில், ஈரோடு மாநகரில் நேற்று காலை, 11 மணிக்கு மேல் வானம் மேகமூட்டமாகவும், லேசான வெயிலும் தென்பட்டது. மாலை, 5 மணியளவில் துவங்கிய மழை, 40 நிமிடங்களுக்கு மேல் பரவலாக கொட்டியது.

குண்டடத்தில் கன மழை: இதே போல் தாராபுரம் சுற்று வட்டார பகுதியில் நேற்று இரவு மழை பெய்தது. நகர் பகுதியில் தூரலாக பெய்த மழை குண்டடத்தில் வெளுத்து வாங்கியது. மணக்கடவு, முத்துக்கவுண்டன் பாளையம், தும்பலப்பட்டி, வெங்கிட்டிபாளையம் ஆகிய பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

வாணிப்புத்தூரிலும் கொட்டியது: இதேபோல் வாணிப்புத்தூர் பகுதியில் நேற்று மாலை, 4 மணி முதல் மழை பெய்தது. குண்டேரிப்பள்ளம், வினோபாநகர், டி.என்.பாளையம், பங்களாபுதூர், புஞ்சை துறையம்பாளையம் பகுதிகளில் மழை வெளுத்து வாங்கியது. மாலை, 6 மணி வரை நீடித்த மழையால் மக்கள் வீடுகளில் முடங்கினர்.குண்டேரிப்பள்ளம் அணை நீர்ப்பிடிப்பு பகுதியிலும் மழை பெய்துள்ளது.

பு.புளியம்பட்டியில் சாரல் மழை: புன்செய் புளியம்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான, பனையம்பள்ளி, காராப்பாடி,நொச்சிகுட்டை, காவிலிபாளையம்,மாதம்பாளையம் ஆகிய இடங்களில், நேற்று காலை முதல் மாலை வரை நாள் முழுவதும், வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மாலை 6 மணியளவில் ஆரம்பித்த சாரல் மழை, இரவு 7 மணி வரை மிதமாக பெய்தது. இடி, மின்னல்,காற்று இல்லாமல் அமைதியாக பெய்த மழையால் எந்த பாதிப்பும் இல்லை.தொடர்ந்து இரவு 7 மணி முதல் 9 மணி வரை மழை தூறிக்கொண்டே இருந்தது.

**நில வேம்பு கஷாயம் வழங்கல்**

ஈரோடு: ஈரோடு சூரம்பட்டி வலசு பகுதியில் த.மா.கா., சார்பில் பொதுமக்கள், 600 பேருக்கு நேற்று நில வேம்பு கசாயம், இலவசமாக வழங்கப்பட்டது. த.மா.கா., இளைஞரணி தலைவர் யுவராஜ் துவக்கி வைத்தார். மாநில செயற்குழு உறுப்பினர் சந்திரசேகர், பொது செயலாளர் ரபீக், இளைஞரணி மாவட்ட தலைவர் ரமேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக த.மா.கா., கட்சியினர் நில வேம்பு கசாயம், வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**தேயிலை தூள் உற்பத்தி குறைவு**

மஞ்சூர் : கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை தூள் உற்பத்தி குறைந்து வருகிறது.

நீலகிரியில் உள்ள,15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில், 25 ஆயிரம் பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். தங்களது தேயிலை தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலையை அந்தந்த

கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு வினியோகித்து வருகின்றனர். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக பசுந்தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் அவதியடைந்து வருகின்றனர்.

இதற்கு தீர்வு காண, பல கட்ட போராட்டங்கள் நடத்தியும் தீர்வு கிடைக்கவில்லை. இந்நிலையில், கடந்த வாரம் முழுவதும் பெய்த பருவமழை எதிரொலியை அடுத்து, கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை வரத்து படிப்படியாக குறைந்தது. இதனால், தேயிலை துாள் உற்பத்தியும், 30 சதவீதம் குறைந்துள்ளது. சிறு தேயிலை விவசாய சங்க உறுப்பினர் சுரேஷ் கூறுகையில்,“ தொழிற்சாலைகளுக்கான தேயிலை வரத்து குறையும் சமயத்தில் பசுந்தேயிலைக்கு உண்டான விலையில் முன்னேற்றம் இருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், விலை கிடைக்கவில்லை. இதனால், பறிக்கப்படாத பசுந்தேயிலை தோட்டங்களில் வீணாகி வருகிறது,” என்றார்.

### புறா வளர்ப்பில் விவசாயி ஆர்வம்

பந்தலுார்: பந்தலுார் அருகே சேரம்பாடியில் புறா வளர்ப்பில் விவசாயி ஒருவர் ஆர்வம் காட்டி வருகிறார்.

பந்தலுார் சேரம்பாடி கோரஞ்சால் பகுதியை சேர்ந்த ஆசிப்ஜான் என்பவர் தனது வீட்டில் ஆடு மற்றும் கோழிகளை அதிகளவில் வளர்த்து வருகிறார். இவற்றுக்கு மத்தியில் பூட், மயில், கனிஸ்திரி உள்ளிட்ட பல்வேறு வகை புறாக்களையும் வளர்த்து வருகிறார். பகல் நேரத்தில் வீட்டிற்கு வெளியே உலா வரும் புறாக்கள், மாலை நேரமானால், தானாக கூண்டுக்குள் தஞ்சமடைகின்றன. இந்த புறாக்களை ஜோடியாக விற்பனையும் செய்து வருகிறார். ஆசிப்ஜார் கூறுகையில்,“ எங்கள் காபி தோட்டத்துக்கு மத்தியில் கூண்டு அமைத்து, புறாக்களை வளர்த்து வருகிறேன். இவற்றை இறைச்சிக்காகவோ, மருத்துவ பயன்பாட்டுக்காவோ வழங்குவதில்லை. யாராவது வளர்க்க கேட்டால் மட்டுமே விற்பனை செய்கிறேன். இன்னும் பல வகை புறாக்களை வளர்க்க திட்டமிட்டுள்ளேன். பறவைகளில் புறாக்கள் மட்டுமே மிகவும் அன்பாக பழக கூடியவை; நாம் சொல்வதை அப்படியே புரிந்து கொள்ளும் குணம் படைத்தவை,” என்றார்.

## மாயனூர் பகுதியில் மீன் விற்க அடிப்படை வசதி வேண்டி கோரிக்கை

கரூர்: மாயனூரில் மீன் அதிகமாக கிடைத்தும் அதை பிடிக்கவும், விற்கவும் சரியான வசதியில்லாததால் மீன்பிடிப்பவர்களும், வாங்கும் மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரூர் மாவட்டம், மாயனூர் தடுப்பணையில் இருந்து செல்லும் புதிய கட்டளை வாய்க்காலில், தண்ணீர் அதிகமாக வெளியேறி வருகிறது. தடுப்பணையில் தற்போது. ஒரு டி.எம்.சி., வரை தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளதால், மீன்கள் நன்கு வளர்ந்துள்ளன. மீன்பிடிப்போர் சங்கம் சார்பில், மாயனூர் புதிய கட்டளை வாய்க்கால் பகுதியில், தண்ணீர் வெளியேறும் பகுதியில் பலர் மீன்பிடித்து வருகின்றனர். இப்பகுதிக்கு, கரூர் மற்றும் குளித்தலை சுற்றியுள்ளவர்கள் உயிருள்ள மீன் வாங்க வருகின்றனர். மீன்பிடிப்பவர்களும், மீன் வாங்க வருபவர்களும், கரையோரம் ஆற்றில் இறங்க பாதையில்லாமல் தவித்து வருகின்றனர். இதுகுறித்து, மாயனூர் காவிரி ஆற்றங்கரையோரம் மீன்பிடிக்கும் சங்க நிர்வாகிகள் தெரிவித்ததாவது: தற்போது, மேட்டூர் நீர்த்தேக்கத்தில், 91 அடி உள்ளது. இங்கிருந்து டெல்டா பாசனத்துக்காக காவிரி ஆற்றில், 500 கன அடிநீர் திறக்கப்படுகிறது. மாயனூரில் தடுப்பணை இருப்பதால், ஒன்றரை டி.எம்.சி., வரை தண்ணீர் தேக்க முடியும். இருப்பினும், தற்போது ஒரு டி.எம்.சி., தண்ணீர் வரை மட்டுமே தேக்கப்படுகிறது. உபரிநீராக வருபவற்றை அப்படியே திறந்து விடுகின்றனர். இதன் மூலம் மீன்கள் அதிகளவில் தற்போது கிடைத்து வருகிறது. கெண்டை மீன், ஜிலேபி, ஆரா, விலை அதிகம் உள்ள வஞ்சிரா மீன்கள் கிடைக்கிறது. இதை நாங்கள் சங்கம் அமைத்து பிடித்து வருகிறோம். கரையோரத்தில் இருந்து தண்ணீரில் இறங்கி மீன்பிடிக்க சரியான பாதை வசதிகள் இல்லை. அதேபோல் மீன் வாங்க வருபவர்களும் பாதிக்கப்படுகின்றனர். இதனால், விற்பனை சற்று குறைந்து காணப்படுகிறது. எனவே, மாயனூரில் மீன் பிடிக்கவும், ஆற்றில் இறங்க சிமென்ட் பாதை அமைத்துத் தர, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், மீன்கள் விற்கவும் மாயனூரில் கடைகள் அமைத்துத் தர வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**குளிர்ந்த காற்றுடன் மழைப்பொழிவு: மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

கரூர்: கரூர் மாவட்டம் முழுவதும் லேசான மழை பெய்ததுடன் குளிர்ந்த காற்று வீசியதால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கரூர் நகரைப் பொறுத்தவரை நேற்று காலை, 11.30 மணியளவில் சிறிது நேரம் வெயில் அடித்தது. அதன் பின் வானம் மேக மூட்டத்துடன் காட்சியளித்தது. மாலை, 3.50 மணியளவில் லேசான மழை பெய்தது. அதன் பின் ஓய்ந்தது. திரும்ப மாலை, 4.40 மணியளவில் கனமழை பெய்யத்துவங்கியது. இதேபோல், கரூர் மாவட்டத்தின் கடைக்கோடியான அரவக்குறிச்சி சுற்றுவட்டாரப் பகுதியிலும் இதே நிலை தான் நீடித்தது. மழை இல்லை. ஆனால், குளித்தலை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் காலை சிறிது நேரம் வெயில் அடித்தாலும், மாலை, 4.30 மணியளவில், கனமழை பெய்தது.

இதுகுறித்து, அரவக்குறிச்சி பகுதியில் விவசாயம் செய்யும் முருங்கை விவசாயி முருகேசன் கூறியதாவது: கரூர் மாவட்டத்தில் அதிகமாக மானாவாரி பயிராக விளையும் முருங்கை விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியில் உள்ளனர். பூக்கள் வைத்து காய்க்கும் நிலையில் தண்ணீர் தேவைப்பட்ட நிலையில். தற்போது குளிர்ந்த காலச்சூழ்நிலை நிலவுகிறது. லேசான மழைத்தூறலும் உள்ளது. இது, முருங்கை செழித்து வளர உதவிகரமாக இருக்கும். இந்நிலை தொடர்ந்தால் கடந்தாண்டை விட, இந்தாண்டு அதிகளவில் முருங்கை உற்பத்தி அதிகரிக்கும். தமிழகம் மட்டுமின்றி, அண்டை மாவட்டம் மட்டுமின்றி, கேரளா, கர்நாடகா, டில்லி போன்ற மாநிலங்களுக்கும் அதிகளவில் முருங்கை ஏற்றுமதி செய்யப்படும். இதன் மூலம் விவசாயிகள் அதிகளவில் பயன்பெறுவர். இவ்வாறு அவர் கூறினார்.

**நிலவேம்பு கஷாயம்வழங்கும் முகாம்**

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை சித்த மருத்துவ பிரிவு சார்பாக 5 நாட்கள் நிலவேம்பு கஷாயம் வழங்கும் சிறப்பு முகாம் நடந்தது. நகராட்சி தலைவர் பழனியம்மாள் துவக்கி வைத்தார். டாக்டர் சதீஷ்குமார் தலைமை வகித்தார். சித்த மருத்துவர் திருமாவளவன், இயற்கை மருத்துவர் தேவராஜா முன்னிலை வகித்தனர். பொது மக்களுக்கு நிலவேம்பு குடிநீர்

வழங்கப்பட்டது. மருந்தாளுனர் பால்செல்வி, மருத்துவமனை பணியாளர் மேரி கலைச்செல்வி செய்திருந்தனர்.

**இந்த ஆண்டு மழை எவ்வளவு: கூடு கட்டி உணர்த்தும் பறவைகள்**



காரைக்குடி : ஒவ்வொரு ஆண்டும் பெய்யும் மழை அளவை, கூடு கட்டி முன்கூட்டியே பறவை இனங்கள் உணர்த்தி வருகின்றன. அறிவியல் வளர்ந்த காலத்தில் அதை அலட்சியமாக நாம் நினைப்பதால், வெள்ள சேதங்களை கண்கூடாக கண்டு வருகிறோம்.

உலகில் 10 ஆயிரம் பறவை இனங்கள் இருந்தன. 1400 இனங்கள் அழிக்கப்பட்டு விட்டது. கடந்த 200 ஆண்டில் 300 பறவை இனங்கள் அழிந்துள்ளன. பருவநிலை மாற்றம், இரைக்காக வேட்டையாடப்படுதல் உள்ளிட்டவை இதற்கான காரணங்களாகும்.பொதுவாக பறவை இடம் பெயர்தல் என்பது குளிர் அதிகமாகும் போது வட துருவத்திலிருந்து தென் துருவத்தை நோக்கியும், பூமத்திய ரேகையை நோக்கியும் இருக்கும். இதற்கு 'மைக்ரேஷன்' என்று பெயர். 99 சதவீத பறவைகள் அசைவ விரும்பிகள். மழை பெய்யும் பகுதிகளில்
மட்டுமே பூச்சியினங்கள் தோன்றும். அதனால், அதை நோக்கி அவற்றின் இடம் பெயர்வு இருக்கும். இடம் பெயர்ந்து வரும் பறவைகள் தொடர்ச்சியாக 30 மணி

நேரம் 5 ஆயிரம் கி.மீ.,வரை பறக்க கூடியன.தமிழகத்தில் உள்ள 13 பறவைகள் சரணாலயங்களுக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் பறவைகள் வரத்து இருந்தாலும், இமயமலை பகுதியிலிருந்து வருபவையே அதிகம். இப்பகுதியிலிருந்து வெண்கொக்கு, அரிவாள் மூக்கன், நத்தை கொத்தி நாரை, நீர்காகம், மஞ்சள் மூக்கு நாரை, கூழக்கிடா வருகின்றன. அவ்வாறு வரும் பறவைகள் கூடு கட்டி தங்கள் இனத்தை விருத்தி செய்கின்றன.

பச்சை மரங்களை தேர்வு செய்து, மேகத்தின் நுகர்வையும், நீரோட்டத்தையும் அறிந்து அதற்கேற்ற வகையில் கூடு கட்டும். மரத்தின் கீழே கூடு கட்டினால், நடப்பு பருவத்தில் மழை குறைவு. உச்சியில் கட்டினால் மழை அதிகம் என்பது பறவை ஆர்வலர்களின் அசைக்க முடியாத கூற்று. பறவை, கூடு கட்டி இருக்க முடியாதவாறு வெள்ளம், நில நடுக்கம் இருப்பதாக தெரிய வந்தால், உடனே திரும்பி விடும். ஒலி அலைகளை உணரும் ஆற்றல் அவற்றுக்கு உள்ளது.இந்த ஆண்டு திருப்புத்துார் வேட்டங்குடி பறவைகள் சரணாலயத்துக்கு வந்த பறவைகள் மரத்தின் உச்சியில் கூடு கட்டி, இந்த பருவத்தில் அதிக மழை பொழியும் என்பதை முன்கூட்டியே உணர்த்தியுள்ளன. பறவைகள் மூலம் தகவல்களை தெரிந்து கொண்ட மனிதன், அவற்றை அழித்ததால் தற்போது வானிலை ஆய்வு மையத்தை எதிர்நோக்கி, வெள்ளம் வந்த பின் மிதக்கிறான். மனித இனம் அழிந்தாலும், பறவைகள் வாழும். பறவைகள் அழிந்தால் மனிதன் வாழ முடியாது, என்கின்றனர் பறவைகள் ஆர்வலர்கள்.

**நெற்பயிரில் பூச்சி தாக்குதல் :கட்டுப்படுத்த ஆலோசனை**

சிவகங்கை:""நடவு செய்த நெற்பயிரில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த மருந்து தெளிக்க வேண்டும்," என கண்ணங்குடி வேளாண் உதவி இயக்குனர் சுப்புலட்சுமி தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: நடப்பு சம்பா பருவத்தில் நேரடியாக 7,200 எக்டேரில் நெற்பயிர் சாகுபடி செய்து, 60 நாள் பயிராக உள்ளது. கடந்த 10 நாட்களாக தொடர் மழை பெய்துள்ளதால், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகம் தென்படுகிறது.

குறிப்பாக இலைச்சுருட்டுப்புழு,வெட்டுப்புழு, கரையான் மற்றும் குலைநோய் தாக்குதல் காணப்படுகிறது. மேக மூட்டத்துடன் இருப்பதால், பூச்சி தாக்குதல் இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. இப்பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த "தயோமீதாக்சம்', "டிரைசைக்லோஜோல்' தலா 500 கிராம் மருந்தை ஒரு எக்டேருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் காலை நேரத்தில் தெளிக்கலாம். இப்பயிர் பாதுகாப்பு மருந்துகள் வேளாண் விரிவாக்க மையத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் மூலம் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. விவசாயிகள் வேளாண் அலுவலரை தொடர்பு கொண்டு பெறலாம், என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தெற்கு அந்தமானில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை: கடலோர மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பு**

தெற்கு அந்தமான் கடலில் புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலையால், வட கடலோர மாவட்டங்களில் மீண்டும் பலத்த மழை பெய்யும் வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது: தென் மேற்கு வங்கக் கடல், அதை ஒட்டியப் பகுதியில் நிலை கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, ஞாயிற்றுக்கிழமை தென்மேற்கு வங்கக் கடல், அதை ஒட்டிய இலங்கையில் காற்றழுத்தத் தாழ்வு நிலையாகவே நீடிக்கிறது.

அதைத் தொடர்ந்து, தென் கிழக்கு வங்கக் கடல், அதை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதியில், புதிதாக காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில், தென்மேற்கு வங்கக் கடல், அதை ஒட்டிய தென் கிழக்கு வங்கக் கடல் பகுதியில், அது காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும்.

மாநிலத்தின் வட கடலோர மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் பலத்த மழை இருக்கும். அடுத்து வரும் நாள்களில், ஓரிரு இடங்களில் பலத்த, மிகப் பலத்த மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

அதே போல், தமிழகத்தின் உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் பலத்த மழை இருக்கும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, பொதுவாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரில் ஒரு சில நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யவும் வாய்ப்புண்டு.

மீண்டும் பலத்த மழை: அந்தமான் அருகே உருவாகும் காற்றழுத்தத் தாழ்வு நிலையால், பெரும்பாலும் சென்னை, ஆந்திரத்தின் சில பகுதிகளில் அதிகளவு மழை பெய்யும்.

இப்போது, இலங்கை அருகேயும், அந்தமான் அருகேயும் இரு வேறு காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருப்பதால், தென் மாவட்டம், வட மாவட்டங்களில் மீண்டும் பலத்த மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது.

மழை நிலவரம்(மி.மீட்டரில்):

கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, காஞ்சிபுரம், நாகை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மட்டுமே மழை பதிவானது. இதில் அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டியில் 40 மி.மீ, திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்தில் 30 மி.மீ, காஞ்சிபுரம் மாவட்டம் கேவிகே காட்டுக்குப்பம், மகாபலிபுரம், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டையில் தலா 20 மி.மீ, கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி, நாகர்கோயில், நாகை மாவட்டம் மயிலாடுதுறை, காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு, கேளம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம் தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் தலா 10 மி.மீட்டர் மழை பதிவானது என்றார் எஸ்.ஆர்.ரமணன்.

மாலையில் மழை: வடகிழக்குப் பருவ மழை தொடங்கியது முதல், சென்னை உள்பட மாநிலம் முழுவதும் பலத்த மழை பெய்தது.

கடந்த ஒரு வாரமாக, சென்னை, சுற்றுப்புறப்பகுதியில் மழை ஓய்ந்திருந்தது.

இந்த நிலையில், சென்னையில் எழும்பூர், பாரிமுனை உள்ளிட்ட மாநகரின் முக்கியப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலையில் மிதமான மழை பெய்தது.

**வரத்துக் குறைந்ததால் பூக்கள் விலை கடும் உயர்வு**

பலத்த மழையின் காரணமாக உற்பத்தி பாதிப்படைந்துள்ளதால், சென்னையில் பூக்களின் விலை அதிகரித்துள்ளது. சென்னை கோயம்பேடு பூ சந்தைக்கு கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பூக்கள் தினமும் விற்பனைக்காகக் கொண்டு வரப்படுகின்றன. இவற்றை சென்னை, திருவள்ளுவர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். சென்னை அதன் சுற்றுப் பகுதிகளில் தீபாவளிக்கு முன்பு வரை ஒரு கிலோ மல்லிகை ரூ. 150-க்கும், கனகாம்பரம் ரூ. 350-க்கும் விற்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, தமிழகத்தில் அண்மையில் பெய்த பலத்த மழை காரணமாக, கடந்த 18-ஆம் தேதி முதல் கோயம்பேடு சந்தைக்கு பூக்கள் வரத்து குறைந்தது. ஒரு முழம் ரூ. 50: இந்த நிலையில், சென்னையில் ஞாயிற்றுக்கிழமை ஒரு கிலோ மல்லிகை ரூ. 850-க்கும், முல்லை ரூ. 700-க்கும், கனகாம்பரம் ரூ. 900-ஆகவும் விலை அதிகரித்து காணப்பட்டது. இதேபோல, நவம்பர் மாதத் தொடக்கத்தில் ரூ. 20 முதல் ரூ. 25 வரை விற்கப்பட்ட ஒரு முழம் மல்லிகை, முல்லை தற்போது (ஞாயிற்றுக்கிழமை) ரூ. 50 வரை விற்கப்படுகிறது. இதுகுறித்து கோயம்பேடு பூ சந்தை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் அருள் விசுவாசம் கூறியதாவது: கடந்த 8-ஆம் தேதி வரை தினமும் 22 லாரிகளில் 400 டன் வரை பூக்கள் கொண்டு வரப்பட்டன. இதைத் தொடர்ந்து, பூக்கள் விளையும் பகுதிகளில் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதால், 170 டன்கள் முதல் 200 டன் பூக்கள் மட்டுமே விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. ஆனால், சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குச் செல்ல பக்தர்கள் மாலை அணிந்து வருவதாலும், முகூர்த்த நாள்கள் தொடர்ந்து வரவிருப்பதாலும் பூக்களுக்கானத் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இருப்பினும் தேவைக்கேற்ற உற்பத்தி இல்லை. இதனால் அவற்றின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது என்றார்.சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி பூக்கள் விலை விவரம் (கிலோவில்):

மல்லிகை-ரூ.850

முல்லை-ரூ.700

கனகாம்பரம்-ரூ.900

ரோஜா-ரூ.180

சம்பங்கி-ரூ.80

அரளி-ரூ.200

கோழிக்கொண்டை - ரூ.100

## பண்ணை பசுமைக் கடைகளில் தக்காளி கிலோ ரூ.25



பசுமை பண்ணைக் கடைகளில் தக்காளி ஒரு கிலோ ரூ.25-க்கும், வெளிச்சந்தையில் ரூ.50-க்கும் விற்பனையானது. வெளிச்சந்தையில் காய்கறிகளின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், சென்னையில் ஏற்கெனவே 58 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள், 2 நடமாடும் கடைகளும் செயல்படுகின்றன. தொடர் மழையால், காய்கறிகளின் வரத்துக் குறைந்து விலையும் அதிகரித்தது. எனவே, விலையைக் கட்டுப்படுத்தும் சென்னையில் தாற்காலிகமாக 50 பண்ணை பசுமைக் கடைகள் கடந்த 18-ஆம் தேதி முதல் தொடர்ந்து இயங்கி வருகிறது. இந்தக் கடைகள் ஞாயிற்றுக்கிழமையும் செயல்பட்டன.

இந்தக் கடைகள் தொடங்கப்பட்டது முதல் ஒரு கிலோ தக்காளி விலை ரூ.43-க்கு விற்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், சனிக்கிழமை ரூ.37-க்கும், ஞாயிற்றுக்கிழமை ரூ.25-க்கும் விற்பனையானது.
மற்ற காய்கறிகளின் விலை (ஒரு கிலோ): புடலைங்காய்-ரூ.34, கத்தரிக்காய்-ரூ.40, வெங்காயம்-ரூ.39, உருளைக் கிழங்கு-ரூ.23, பீட்ரூட்-ரூ.22, வெண்டைக்காய்-ரூ.47.

**மணமை ஏரியில் நீர்க்கசிவு:விவசாய பயிர்கள் பாதிப்பு**

காஞ்சிபுரம் அருகே மணமை ஏரியில் நீர்கக்சிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டுள்ளன. இந்த நீர் கசிவு காரணமாக அப் பகுதியில் உள்ள விவசாயப் பயிர்கள் பாதிக்கப்பட்டன.

மாமல்லபுரம் அருகிலுள்ள மணமைக் கிராமத்தில் 150 ஏக்கர் பரப்பளவு ஏரியில் திடீரென நீர்க் கசிவு ஏற்பட்டது. ஏரி நீர் வெளியேறி அருகில் உள்ள விளை நிலங்களில் புகுந்தது. இதனைத் தொடர்ந்து அப் பகுதியில் உடைப்பு ஏற்படலாம் என்பதால் பொதுப் பணித்துறையினர், வருவாய்த் துறையினர், கிராம பொதுமக்கள் நீர்க்கசிவு உள்ள பகுதிகளில் மணல் மூட்டைகளை போட்டு வைத்தனர். இருப்பினும் லேசான நீர் அப் பகுதியில் இருந்து வெளியேறி வருகிறது. இதனால் ஏரியைச் சுற்றியுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

**உத்தரமேரூர் ஒன்றியத்தில் 957 ஏக்கரில் பயிர்கள் சேதம்**

உத்தரமேரூர் ஒன்றியத்தில் சுமார் 957 ஏக்கர் விளை நிலங்களில் மழை வெள்ளத்தால் பயிர்கள் சேதமடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

உத்தரமேரூர் ஒன்றியத்துக்கு உள்பட்ட கம்மாளம்பூண்டி, அழிசூர், மருதம், குண்ணவாக்கம், ஆனம்பாக்கம், காக்கநல்லூர், திருப்புலிவனம், கருவேப்பம்பூண்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பயிரிட்டிருந்த நெல், கரும்பு, வேர்க்கடலை, காய்கனி பயிர்கள் மழைவெள்ளத்தால் அழுகி

சேதமடைந்தன. மேலும், தற்போது வரை ஒரு சில இடங்களில் இன்னும் மழை வெள்ளம் வடியவில்லை.

இது குறித்து விவசாயிகள் தொடர்ந்து வேளாண்மை, வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு கோரிக்கை மனுக்கள் அளித்து வருகின்றனர். ஆனால் அதிகாரிகள் இதுவரை சேதமடைந்த பயிர்களை பார்வையிட வரவில்லை என்று விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும் மழைக்கு உத்தரமேரூர் சின்னநாராசம்பேட்டை, திரு வானைக்கோவில், கட்டியாம்பந்தல், திருவந்தவார், களியாம்பூண்டி, மாம்பாக்கம் மல்லிகாபுரம், புத்தளி உள்ளிட்ட பல கிராமங்களில் மழை வெள்ளம் வீடுகளில் புகுந்து சேதம் ஏற்படுத்தியது. இது வரை சுமார் 850 பேருக்கு மட்டுமே நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இது குறித்து விவசாயிகள் கூறுகையில் மழைநீர் கால்வாய்களை முறையாக சீரமைக்காததால் விளை நிலங்களுக்கு செல்லும் பாசனக் கால்வாய்கள் தூர்ந்து மழைநீர் விளை நிலங்களில் புகுந்ததால் நெற்பயிர்கள் பெருமளவில் சேதமடைந்தது.

எனவே கால்வாய்களை சீர்குலைக்கும் பெருமளவு ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவிகள் விரைவாக வழங்க வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

### திருப்பூரில் பரவலான மழை

திருப்பூரில் ஒரு வாரத்துக்கு பிறகு ஞாயிற்றுக்கிழமை மீண்டும் பரவலாக மழை பெய்தது.

தமிழகத்தில் கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து பருவ மழை பெய்து வருகிறது.

திருப்பூர் மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வந்த கனமழை, கடந்த வாரமாக ஓய்ந்தது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை திருப்பூர் மாவட்டத்தின் புறநகர்ப் பகுதிகளான அவிநாசி, பூண்டி, அம்மாபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது.

தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இரவு திருப்பூரில், பல்லடம் சாலை, தாராபுரம் சாலை, அவிநாசி சாலை உள்பட பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

மாவட்ட நிர்வாகம் சார்பில் ஏற்கெனவே பருவ மழை பாதிப்புகள்,தொற்று நோய்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

வெள்ளக்கோவிலில் சாரல் மழை

வெள்ளக்கோவிலில் ஞாயிற்றுக்கிழமை மாலை சாரல் மழை பெய்தது. காலையிலிருந்தே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இப்பகுதியில் கனமழை அறிகுறி காணப்படவில்லை. சாரல் மழை பெய்துள்ளது.

**"மரக்கன்றுகளை வளர்ப்பது சமூகக் கடமை'**

மரங்கள் இன்றி மனித இனம் உயிர் வாழ முடியாது; மரக்கன்றுகளை வளர்ப்பது ஒவ்வொருவருடைய சமூகக் கடமை என்று தமிழக அரசின் திட்டக் குழு முன்னாள் உறுப்பினர் ஜி.குமாரவேல் தெரிவித்தார்.

வனம் இந்தியா அறக்கட்டளை சார்பில் மரக்கன்று வளர்ப்பது குறித்த "வான் மழை' மாதாந்திரக் கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதற்கு, அறக்கட்டளைத் தலைவர் சுவாதி கண்ணன் தலைமை வகித்தார். செயலாளர் சுந்தரராஜன் முன்னிலை வகித்தார். பொருளாளர் ஆடிட்டர் தங்கராஜ் வரவேற்றார்.

இதில், ஜி.குமாரவேல் பேசியது.

நாகரிக வளர்ச்சி, மக்கள் தொகைப் பெருக்கம் ஆகியவற்றால் கிராமப்புறங்கள் 70 சதவீதம் நகர்ப்புறங்களாக மாறி வருகின்றன. விவசாய நிலங்களைப் பாதுகாக்கவும் விவசாயத்தைப் பாதுகாக்கவும் மரக்கன்றுகள் வளர்ப்பது அவசியம். நீரின்றி வறட்சியில் வளரும் மரங்கள், திரட்சியாக மலர்ந்து மக்களுக்கு நன்மை செய்கின்றன. மண்ணை மதிக்க வேண்டும். மண் வளம் குறைந்தால் உயிர்வாழ முடியாது. மண்ணின் உயிரோட்டத்தைக் குறைய

விடக்கூடாது. மண்ணை உயிர்ப்பிக்க, அதைப் பேணிப் பாதுகாக்க மரக்கன்றுகள் வளர்க்க வேண்டிய மிக அவசியம் ஆகும். மழை பெய்தால் மரம் வளரும், மரம் இருந்தால் மழை வரும் என்பதால் மரக்கன்றுகள் வளர்ப்பது நம்முடைய சமூகக் கடமை ஆகும். பல்லடம் பகுதியில் வேம்பு, பூவரசு, புங்கன், ஆலமரம் உள்ளிட்டவை சிறப்பாக வளரும் தன்மையுடைய மண் வளம் உள்ளவை. நிலத்தின் மண் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கேற்ற மரக்கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு, நடப்பட வேண்டும் என்றார்.

இக்கருத்தரங்கில், அருள்புரம் ஜெயந்தி கல்வி நிறுவனங்களின் தலைவர் கே.கிருஷ்ணன், அவிநாசிபாளையம் ஜெய்ஸ்ரீராம் பொறியியல் கல்லூரித் தலைவர் கே.எம்.தங்கராஜ், விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் கணேஷ்வர், நாச்சிமுத்து, பழனிசாமி,செஞ்சேரி மோகன்மந்தராச்சலம் உள்பட பலர் பங்கேற்றனர்.

**நிலவேம்புக் கஷாயம் விநியோகம்**

அன்னூர் ஒன்றியத்துக்கு உள்பட்ட கரியாம்பாளையம் ஊராட்சியில் கடந்த மூன்று நாள்களில் 1,700 பேருக்கு நிலவேம்புக் கஷாயம் வழங்கப்பட்டுள்ளது.

எல்லப்பாளையம் பிரிவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மருத்துவ முகாமில் ஊராட்சித் தலைவர் கதிர்வேல் தலைமையில் அன்னூர் அரசு மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் பொதுமக்களுக்கு நிலவேம்புக் கஷாயத்தை வழங்கினர். கடந்த மூன்று நாள்களில் கரியாம்பாளையம் ஊராட்சியில் 1,700 பேருக்கு நிலவேம்புக் கஷாயம் வழங்கப்படுள்ளது குறிப்பிடத்தக்கது.

பொள்ளாச்சியில்...: கோவை தெற்கு மாவட்ட தமாகா சார்பில், டெங்கு காய்ச்சலைத் தடுக்கும் நிலவேம்புக் கஷாயம் பொள்ளாச்சி பேருந்து நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

கோவை தெற்கு மாவட்ட இளைஞரணித் தலைவர் மணிகண்டன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் அபிராமி செந்தில்குமார் நிலவேம்புக் கஷாயம் வழங்கும் பணியைத் தொடக்கி வைத்தார்.

பொள்ளாச்சி சட்டப்பேரவை பொறுப்பாளர் கார்த்திகேயன், மாவட்ட துணைத் தலைவர் ஜெகதீஷ், நகரத் தலைவர் ஹரிமகாலிங்கம், வட்டாரத் தலைவர் கல்யாண்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### திண்டுக்கல்லில் பலத்த மழை

திண்டுக்கல் நகரில் ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் 1 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் மட்டுமே கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. திண்டுக்கல், வேடசந்தூர், நத்தம் உள்ளிட்ட மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளில் போதிய அளவு மழை பெய்யவில்லை. இந்தப் பகுதிகளில், 5 நாள்களுக்கு முன் தொடர்ந்து 3 நாள்கள் மிதமான மழை பெய்தது. அதன்பின்னர், 4 நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. கார்த்திகை தீபத் திருவிழா முடிந்ததை அடுத்து, மழைக்கான வாய்ப்பு குறைவு என விவசாயிகள் கணிக்கத் தொடங்கினர்.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை முதலே திண்டுக்கல் பகுதியில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பகல் முழுவதும் குளிர்ச்சியாக சீதோஷ்ண நிலை நிலவியது. மாலை 6 மணிக்கு மேல் சாரல் மழை பெய்யத் தொடங்கியது. பின்னர், சுமார் 1 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

இதனால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. பேருந்து நிலையம், ஆர்எஸ் சாலை, ஸ்கீம்ஸ் ரோடு, ஆர்எம் காலனி சாலைகளில் குண்டு குழியுமான இடங்களில் மழைநீர் தேங்கியதால், வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர்.

### திண்டுக்கல்லில் பலத்த மழை

திண்டுக்கல் நகரில் ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் 1 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் மட்டுமே கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. திண்டுக்கல், வேடசந்தூர், நத்தம் உள்ளிட்ட மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளில் போதிய அளவு மழை

பெய்யவில்லை. இந்தப் பகுதிகளில், 5 நாள்களுக்கு முன் தொடர்ந்து 3 நாள்கள் மிதமான மழை பெய்தது. அதன்பின்னர், 4 நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. கார்த்திகை தீபத் திருவிழா முடிந்ததை அடுத்து, மழைக்கான வாய்ப்பு குறைவு என விவசாயிகள் கணிக்கத் தொடங்கினர்.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை முதலே திண்டுக்கல் பகுதியில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பகல் முழுவதும் குளிர்ச்சியாக சீதோஷ்ண நிலை நிலவியது. மாலை 6 மணிக்கு மேல் சாரல் மழை பெய்யத் தொடங்கியது. பின்னர், சுமார் 1 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

இதனால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. பேருந்து நிலையம், ஆர்எஸ் சாலை, ஸ்கீம்ஸ் ரோடு, ஆர்எம் காலனி சாலைகளில் குண்டு குழியுமான இடங்களில் மழைநீர் தேங்கியதால், வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர்.

**வைகை அணையில் சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர்**

வைகை அணை நிரம்பி வருவதையும், பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதையும் கண்டுகளிப்பதற்காக, ஏராளமான சுற்றுலாப் பயணிகள் ஞாயிற்றுக்கிழமை அணைப் பகுதியில் குவிந்தனர்.

வைகை அணை கடந்த 2011 இல் முழுக் கொள்ளளவை எட்டியது. அதன்பின்னர், பருவ காலங்களில் போதிய மழை இல்லாததால், அணை நிரம்பவில்லை. தற்போது, வடகிழக்குப் பருவமழை தேனி மாவட்டத்தில் பரவலாக பெய்ததால், அதிக நீர்வரத்து ஏற்பட்டு வைகை அணை நிரம்பும் நிலையில் உள்ளது.

அணையின் முழுக் கொள்ளளவான 71 அடிக்கு, தற்போது நீர்மட்டம் 68 அடிக்கு மேல் உயர்ந்து வருகிறது. எனவே, கடந்த சனிக்கிழமை அணையிலிருந்து 4 மாவட்டப் பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. வைகை அணையின் நீர்த்தேக்கப் பகுதி கடல் போல் காட்சி அளிப்பதாலும், மதகுகளில் இருந்து ஆர்ப்பரித்து வெளியேறும் தண்ணீரை கண்டு களிப்பதற்காகவும் சுற்றுலாப் பயணிகள் ஏராளமானோர் வந்து செல்கின்றனர்.

தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், அணையின் முன்புள்ள தரைமட்டப் பாலம் நீரில் மூழ்கியுள்ளது. இதனால், பெரியபாலம் வழியாக 2 கி.மீ. தொலைவு சுற்றி வலது கரை மற்றும் இடது கரை பூங்காவுக்குச் செல்ல வேண்டியிருப்பதால், குழந்தைகளுடன் பொதுமக்கள் சிரமப்பட்டனர்.

**விருதுநகர் மாவட்டத்தில்சூடுபிடிக்கும் சூரிய ஒளி மின் உற்பத்தி**

விருதுநகர் மாவட்டத்தில் தீப்பெட்டி, பட்டாசுத் தொழில் உற்பத்தியைத் தொடர்ந்து இப்போது சூரிய ஒளியில் மின் உற்பத்தி செய்யும் திட்டமும் சூடுபிடித்துள்ளது.

மின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் சூரிய ஒளி மின் உற்பத்தி திட்டத்தை ஊக்கப்படுத்தும் வகையில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு மானியங்கள் அளித்து வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, தனியார் நிறுவனங்கள் மூலம் சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டத்தை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. கடும் வெயில் மற்றும் வறட்சிக்குள்ளான விருதுநகர் மாவட்டத்தில் இப்போது சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி மேற்கொள்ளும் நிலையங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. இதனால், தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலிலும், அச்சுத் தொழிலிலும் தடம் பதித்து வந்த இந்த மாவட்டம் இப்போது சூரிய ஒளி மின் உற்பத்தியிலும் முத்திரையைப் பதித்துள்ளது.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை அருகே முத்துராமலிங்கபுரத்தில் தனியார் நிறுவனம் மூலம் சூரிய ஒளியிலிருந்து 8 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் நிலையம், செங்குன்றாபுரம் அருகே செங்கோட்டையில் 40 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம் தொடங்கப்பட்டுள்ளன. இதேபோல் பந்தல்குடி, குருந்தமடம், பாளையம்பட்டி, பெரியபுளியம்பட்டி ஆமத்தூரில் அமைக்கப்பட்டு வரும் தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் சூரிய ஒளி மூலம் மொத்தம் 12 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

செங்கோட்டையில் 40 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்காக அப்பகுதியில் 300 ஏக்கர் நிலத்தில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பேனல்கள் பொருத்தும் பணி நிறைவடைந்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சுற்றுப்பகுதி கிராமத்தைச் சேர்ந்த பலர் வேலைவாய்ப்பு

பெற்றுள்ளனர். இவர்களில் தலா ஒருவர் நாள் ஒன்றுக்கு சுமார் ரூ.350 முதல் ரூ.450 வரை ஊதியம் பெறுகின்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக அலுவலர்கள் கூறியதாவது: மின் உற்பத்தியில் தமிழக அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. செங்கோட்டையில் அமைந்துள்ள 40 மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்தில் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் 7.5 கி.மீட்டர் தொலைவில் எரிச்சநத்தத்தில் உள்ள 110 கி.வாட் துணை மின் நிலையத்தில் இணைக்கப்பட்டு, அதன்மூலம் மின் தொகுப்பு பிரதான பாதையில் இணைக்கப்பட்டுள்ளது. இதனால், மின் பற்றாக்குறை பெருமளவில் குறையும் என்றனர்.

தின பூமி

**பெரியாறு, அமராவதி அணைகளிலிருந்து இன்று முதல் தண்ணீர் திறப்பு: முதல்வர் ஜெயலலிதா உத்தரவு**



சென்னை, பெரியாறு மற்றும் அமராவது அணைகளிலிருந்து இன்று முதல் தண்ணீரை திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தேனி மாவட்டம், பெரியாறு அணையிலிருந்து கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாயக்கால்களின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பெரியாறு அணையிலிருந்து கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாயக்கால்களின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு பாசனத்திற்காக 30.11.2015 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தேனி மாவட்டம், தேனி மற்றும் உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள 5,146 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்; திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களிலுள்ள அமராவதி பாசன அமைப்பின்கீழ் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு 30.11.2015 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 54,637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார் முதல்வர் ஜெயலலிதா. ஏற்கெனவே வைகை அணை நேற்று முன்தினம் திறக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

**பயிர் சாகுபடிக்காக வைகை அணையிலிருந்து தண்ணீர் திறப்பு:அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம் திறந்து வைத்தனர்**



மதுரை - மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட பாசன நிலங்களின் பயிர் சாகுபடிக்காக வைகை அணையிலிருந்து தண்ணீரை ஓ.பன்னீர்செல்வம் , அமைச்சர் செல்லூர் கே.ராஜூ ஆகியோர் திறந்து வைத்தனர். முதல்வ ஜெயலலிதா உத்தரவின்படி, வைகை அணையிலிருந்து மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள வைகை பழைய பாசன நிலங்களில் பயிர் சாகுபடி செய்வதற்காக தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ந.வெங்கடாசலம் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் இல.சுப்பிரமணியன், ஆகியோர் முன்னிலையில் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர் செல்லூர் கே.ராஜூ ஆகியோர் தண்ணீரை திறந்து வைத்தனர். அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவிக்கையில், ஜெயலலிதா தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணையிலிருந்து பெரியாறு பிரதானக் கால்வாய் ஒரு போக பாசன நிலங்களுக்கும், இருபோக பாசனத்தில் இரண்டாவது போகப் பாசன நிலங்களுக்கும், திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழ் உள்ள ஒருபோக பாசன நிலங்களுக்கும், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள வைகை பழைய பாசனப் பகுதிகளுக்கும் தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து வந்த கோரிக்கையினை ஏற்று, தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் திறந்து விடப்பட்டுள்ள தண்ணீர் பெரியாறு பாசனப் பரப்பாகிய 45,041 ஏக்கர் நிலங்களுக்கு இரண்டாம் போகத்திற்கும், ஒருபோக பாசனப் பரப்பாகிய 85,563 ஏக்கர் நிலங்களுக்கும் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழ் உள்ள ஒருபோக பாசனப் பகுதியான 19,439 ஏக்கர் நிலங்களுக்கும் என மொத்தம் 1,50,043 ஏக்கர் நிலங்களுக்கு வைகை அணையிலிருந்து வினாடிக்கு 1,000 கனஅடி வீதமும், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள வைகை பழைய பாசனப் பகுதிகளுக்கு 3,000 மி.கனஅடி தண்ணீரை, வைகை பழைய பாசனப் பகுதி 3-ற்கு 67,837 ஏக்கர் நிலங்களுக்கு 8 நாட்களுக்கும், 575 மி.கனஅடி தண்ணீரை, பாசனப் பகுதி 2-ற்கு 40,743 ஏக்கர் நிலங்களுக்கு 5 நாட்களுக்கும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

மேலும், இதனால் மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 2,59,663 ஏக்கர் நிலஙகள் பாசன வசதி பெறும். எனவே,

வைகை பழைய பாசன நிலங்களைச் சார்ந்த விவசாயிகள் பெருமக்கள் குறுகியகால பயிர்களை நடவு செய்து நீரினை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று பயனடையுமாறு மண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் தெரிவித்தார். இந்நிகழ்வின் போது, மாண்புமிகு மதுரை மாநகராட்சி மேயர் வி.வி.ராஜன் செல்லப்பா, தேனி பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.பார்த்திபன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.லாசர், பி.வி.கதிரவன், எம்.வி.கருப்பையா, எம்.முத்துராமலிங்கம், கே.தமிழரசன், முதன்மை பொறியாளர் வள்ளியப்பன்;, கண்காணிப்பு பொறியாளர் முருகசுப்பிரமணியன்;, செயற்பொறியாளர் முத்துப்பாண்டி, உதவி செயற்பொறியாளர் அன்புசெழியன்;, உதவி பொறியாளர்கள் குபேந்திரன், ராஜகோபால் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தெற்கு அந்தமானில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை: தமிழகத்தில் மீண்டும் கனமழைக்கு வாய்ப்பு**



சென்னை, தெற்கு அந்தமான் பகுதியில் வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது, இதனால் அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை தற்போது வங்கக் கடலின் தென்மேற்கே இலங்கை கடற்பகுதியில் நிலை கொண்டுள்ளது. இந்நிலையில் தென்கிழக்கு வங்கக்கடலில், தெற்கு அந்தமான்

கடலில் காற்றழுத்த தாழ்வு ஒன்று புதிதாக உருவாகியுள்ளது. இதன் தாக்கம் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் இது வங்கக் கடலின் தென் மேற்கே காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்பிருக்கிறது.

இதனையடுத்து தமிழகத்தின் வட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி கடலோரப்பகுதிகளின் பெரும்பாலான மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் வானிலை பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்பட்டாலும் ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் தெரிவித்துள்ளார்.

மேலும், அடுத்த 3 நாட்களுக்கு தமிழகத்தின் வடகடலோர மாவட்டங்களில் மிதமானது முதல் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் கன்னியாகுமரி பூதபாண்டியிலும், திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்திலும் முறையே 4 செ.மீ, மற்றும் 3 செமீ மழை பதிவாகியுள்ளது. காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் 2 செமீ முதல் 1 செமீ வரை மழை பதிவாகியுள்ளது. சென்னையில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. சீர்காழியில் பலத்த காற்றுடன் ஒரு மணிநேரம் கனமழை பெய்தது. புதுச்சேரி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கிய நாளிலிருந்து கிட்டத்தட்ட 3 வாரங்களுக்கு மேலாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையால் அதிகம் பாதிக்கப்பட்டது சென்னை, மாநகரம். மேலும் கடலூர் மாவட்டத்திலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. சென்னையிலும் கடலூர் மாவட்டத்திலும் நிவாரண மற்றும் மீட்பு பணிகளை தமிழக அரசு முடுக்கிவிட்டது. இதன் காரணமாக இப்பகுதிகளில் இயல்பு நிலை இப்போதுதான் திரும்பிவருகிறது. ஆனால் அதற்குள் மீண்டும் ஒரு புதிய புயல் சின்னம் உருவாகியிருப்பது மக்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் தமிழக அரசு முன்னேச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. தமிழக அரசின் நிவாரண பணிகளை டெல்லியிலிருந்து வந்த மத்தியக் குழுவும் பாராட்டியது நிணைவிருக்கலாம்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## வேடந்தாங்கல் ஏரியில் குவிந்த 25 ஆயிரம் பறவைகள்: ஒரு லட்சம் மீன் குஞ்சுகளைவிட திட்டம்_ - பார்வையாளர்கள் வருகையும் அதிகரிப்பு



வேடந்தாங்கல் ஏரி நிரம்பியதை அடுத்து சரணாலயத்துக்கு 25 ஆயிரம் வெளிநாட்டு பறவைகள் வந்துள்ளன. இதையடுத்து பார்வை யாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

சென்னையில் இருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் அருகில் வேடந்தாங்கல் பறவைகள் சரணா லயம் அமைந்துள்ளது. இங்கு நிலவும் இதமான தட்பவெப்பச் சூழல் காரணமாக ஆண்டுதோறும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டு பறவைகள் இனப் பெருக்கத்துக்காக வருகின்றன. பின்னர் குஞ்சுகளுடன் தாய்நாடு திரும்புகின்றன.

தமிழகத்திலுள்ள 15 சரணால யங்களில் வேடந்தாங்கல் பழமை யானதாகும். இந்த சரணாலயத்தை இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் அரசு 1798-ம் ஆண்டு அடையாளம் கண்டு 1858-ல் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்பேரில் மேம்படுத்தப்பட்டது. அப்போது இருந்த மெட்ராஸ்

வனச்சட்டப்படி பாதுகாக்கப்பட்டு வந்த அப்பகுதி பின்னர், 1972-ம் ஆண்டு உருவாக் கப்பட்ட வன உயிரின பாதுகாப்பு சட்ட விதிகளின் கீழ் கடந்த 1988-ம் ஆண்டு வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் என்று தமிழக அரசு அறிவித்தது.

இத்தகைய பழமை வாய்ந்த சரணாலயத்தில் கடந்த இரு ஆண்டுகளாக பருவமழை பொய்த் ததால் ஏரியில் நீர் இல்லை. அதனால் பறவைகள் வரத்து குறைந்ததுடன், பார்வையாளர் களின் எண்ணிக்கையும் குறைந்து வெறிச்சோடிக் காணப்பட்டது.

இந்த ஆண்டு நவம்பர் மாத தொடக்கத்திலிருந்தே பெய்த கனமழையால் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான ஏரிகள் நிரம்பிய நிலையில், வேடந்தாங்கல் ஏரியும் நிரம்பியது. இதனால் இங்கு பறவைகளின் வரத்து தற்போது அதிகரித்துள்ளது.

இது தொடர்பாக வனத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தற்போது ஆஸ்திரேலியா, சீனா, நேபாளம், பாகிஸ்தான், சுவிட்சர் லாந்து, கனடா, இலங்கை, சைபீரியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் 15 பறவை இனங்களைச் சேர்ந்த 25 ஆயிரம் பறவைகள் வந்துள்ளன.

குறிப்பாக கூழைக்கடா, கரண்டி வாயன், நத்தைக்கொத்தி நாரை, ஊசிவால் வாத்து, சாம்பல் நிற நாரை, வண்ண நாரை, பாம்பு தாரா உள்ளிட்டவைகள் வந்துள்ளன. இவை தற்போது ஏரியில் உள்ள மரங்களில் கூடுகளைக் கட்டவும் தொடங்கியுள்ளன. அதனால் கடந்த சில நாட்களாக பார்வை யாளர்களின் வருகையும் அதிகரித்துள்ளது.

இந்த பறவைகளுக்கு இரையை உருவாக்குவதற்காக 1 லட்சம் மீன் குஞ்சுகளை ஏரியில் விட திட்டமிட்டிருக்கிறோம். பருவ மழை முடியுவதற்கு முன்பாக விட்டால், அடுத்த மழைக்கு மீன் குஞ்சுகள் ஏரியை விட்டு வெளியேறிவிடும் என்பதால், பருவ மழை முடிந்த பிறகு, ஏரியில் மீன் குஞ்சுகள் விடப்படும்.

இங்கு பறவைகளை பார்வையாளர்கள் அருகிலிருந்து பார்க்கலாம். மிக மிக அருகில் பார்க்கும் வகையில் பைனாகுலர் வசதியும் உள்ளது. உயரத்தில் இருந்து பறவைகளை பார்க்கும் விதமாக பார்வை கோபுரங்களும் உள்ளன.

இங்கு சிறுவர்களுக்கு ரூ.2-ம், பெரியவர்களுக்கு ரூ.5-ம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது என்றார்.

**போக்குவரத்து வசதி**

சென்னை கடற்கரை ரயில் நிலையத்திலிருந்து இயக்கப் படும் சில மின்சார ரயில்களில் ரூ.20 கட்டணத்தில் மதுராந்தகம் சென்று அங்கிருந்து அரசு பஸ்கள் மற்றும் ஷேர் ஆட்டோக்களில் வேடந்தாங்கலை அடையலாம். செங்கல்பட்டிலிருந்தும் பஸ் வசதி உள்ளது. ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் மூடப்படும். அதுவரை விடுமுறையின்றி சரணாலயம் திறந்திருக்கும்.

## பெரியாறு, அமராவதி அணைகளில் இன்று முதல் தண்ணீர் திறப்பு_: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு


பாசனத்துக்காக பெரியாறு மற் றும் அமராவதி அணைகளில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறக்கப்படும் என முதல்வர் ஜெய லலிதா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியி ருப்பதாவது:

தேனி மாவட்டம் பெரியாறு அணையிலிருந்து கம்பம் பள்ளத் தாக்கில் உள்ள பி.டி.ஆர்., மற்றும் பெரியார் வாய்க்கால்களின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்க ளுக்கு பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடும்படி விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை வந்தது. அதே போல, திருப்பூர் மாவட்டம் அமரா வதி அணையிலிருந்து திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக் கட்டு பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறக்கவும் கோரிக்கை வந்தது.

இக்கோரிக்கைகளை ஏற்று, பெரியாறு மற்றும் அமராவதி அணைகளில் இருந்து 30-ம் தேதி (இன்று) முதல் தண்ணீர் திறக்கப் படும். இதனால், தேனி, உத்தம பாளையத்தில் 5 ஆயிரத்து 146 ஏக்கர், திருப்பூர், கரூர் மாவட் டங்களில் 54 ஆயிரத்து 637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தெற்கு அந்தமானில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை: தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு




தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு நிலையுடன், தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் தெற்கு அந்தமான் கடலில் மற்று மொரு காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் கடலோர மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் தெற்கு அந்தமான் பகுதி யில் உருவான வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி, தென் கிழக்கு வங்கக்கடலில் பயணித்து, தற்போது தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் இலங்கையை ஒட்டிய கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்கு நர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத் தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிக் கிறது. அதே நேரம், தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதை ஒட்டிய தெற்கு அந்தமான் பகுதி யில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. வட கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும். இவ்வாறு அவர் தெரி வித்தார்.

டிசம்பர் 1, 2 தேதிகளில் கடலோர மாவட்டங்களில் கனமழை அல்லது மிக கனமழைக்கும், 3-ம் தேதி கனமழைக்கும் வாய்ப்புள் ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம், பூதப் பாண்டியில் 4 செ.மீ., பாபநாசத்தில் 3, காட்டுக்குப்பம், மாமல்லபுரம், செங்கோட்டையில் 2 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

இந்நிலையில், நேற்று அதி காலை 5 மணி முதல் 6:30 மணி வரை சென்னை புறநகர் பகுதிகள், காஞ்சிபுரம் மாவட்டத்தின் சில பகுதிகளில் மிதமானது முதல் கனமழை வரை பெய்தது.

இதேபோல நாகை, கடலூர், காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி உள் ளிட்ட பல பகுதிகளிலும் நேற்று காலை முதல் தொடர்மழை பெய்து வருகிறது. நேற்று பிற்பகல் முதல் சென்னை தி.நகர், வேளச்சேரி, போரூர் மற்றும் புறநகர் பகுதி களில் மழை பெய்து வருகிறது.

**விடுமுறை அறிவிப்பு**

புதுச்சேரி பள்ளிகளுக்கும், கடலூர் மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கும் இன்று விடு முறை அறிவிக்கப்பட்டுள்ளது._

**கனமழை காரணமாக 14 மாவட்டங்களில் பள்ளிகளுக்கு விடுமுறை**



கனமழை காரணமாக சென்னை திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, அரியலூர், தருமபுரி, திருவாரூர், தஞ்சை, தூத்துக்குடி நாகை, கரூர் ஆகிய 14 மாவட்டங்களில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியிலும் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**தேர்வுகள் ஒத்திவைப்பு:**

சென்னை, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, திருவள்ளூர் பல்கலைக்கழக தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. தேர்வு தேதி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநிலக் கல்லூரி தேர்வுகள் மட்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இன்று நடைபெறவிருந்த தேர்வுகள் டிசம்பர் 15-ல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா பல்கலைக்கழக தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மாற்று தேதி பின்னர் அறிவிக்கப்படும் என பல்கலைககழக பதிவாளர் கணேசன் அறிவித்துள்ளார்.

**கனமழைக்கு வாய்ப்பு:**

தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு நிலையுடன், தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் தெற்கு அந்தமான் கடலில் மற்று மொரு காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் கடலோர மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் தெற்கு அந்தமான் பகுதி யில் உருவான வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி, தென் கிழக்கு வங்கக்கடலில் பயணித்து, தற்போது தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் இலங்கையை ஒட்டிய கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்கு நர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத் தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிக் கிறது. அதே நேரம், தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதை ஒட்டிய தெற்கு அந்தமான் பகுதி யில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. வட கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும். இவ்வாறு அவர் தெரி வித்தார்.

டிசம்பர் 1, 2 தேதிகளில் கடலோர மாவட்டங்களில் கனமழை அல்லது மிக கனமழைக்கும், 3-ம் தேதி கனமழைக்கும் வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம், பூதப் பாண்டியில் 4 செ.மீ., பாபநாசத்தில் 3, காட்டுக்குப்பம், மாமல்லபுரம், செங்கோட்டையில் 2 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

இந்நிலையில், ஞாயிறு அதிகாலை 5 மணி முதல் 6:30 மணி வரை சென்னை புறநகர் பகுதிகள், காஞ்சிபுரம் மாவட்டத்தின் சில பகுதிகளில் மிதமானது முதல் கனமழை வரை பெய்தது.

இதேபோல நாகை, கடலூர், காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி உள் ளிட்ட பல பகுதிகளிலும் நேற்று காலை முதல் தொடர்மழை பெய்து வருகிறது. நேற்று பிற்பகல் முதல் சென்னை தி.நகர், வேளச்சேரி, போரூர் மற்றும் புறநகர் பகுதி களில் மழை பெய்து வருகிறது.

## பெரியாறு, அமராவதி அணைகளிலிருந்து நீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவு



பெரியாறு மற்றும் அமராவது அணைகளிலிருந்து நீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தேனி மாவட்டம், பெரியாறு அணையிலிருந்து கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாயக்கால்களின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி

மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பெரியாறு அணையிலிருந்து கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாயக்கால்களின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு பாசனத்திற்காக 30.11.2015 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தேனி மாவட்டம், தேனி மற்றும் உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள 5,146 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்; திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களிலுள்ள அமராவதி பாசன அமைப்பின்கீழ் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு 30.11.2015 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 54,637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார் ஜெயலலிதா.

## 95 சதவீத உணவுகளுக்கு மண்ணே அடிப்படை: தேசியக் கருத்தரங்கில் ஸ்வீடன் விஞ்ஞானி



மதுரையில் கடந்த வெள்ளி, சனிக்கிழமை களில் (20, 21ம் தேதி) நடந்த வேளாண் கருத்தரங்கின் தலைப்பே வித்தியாசமாக இருந்தது. ‘பசுமை பூமிக்கான உணவும், வேளாண்மையும்’ என்ற தலைப்பிலான இந்தக் கருத்தரங்கின் உள்ளடக்கமும்கூட இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்திருந்தது.

“மனித நாகரிகம் வளர்வதற்கு வேளாண்மையே அடிப்படை. ஆனால், என்றைக்குச் சந்தையை மையப்படுத்திய வணிகமாக விவசாயம் மாறியதோ, அப்போதே உணவு நஞ்சாக ஆரம்பித்துவிட்டது. மனித ஆரோக்கியம் மட்டுமின்றி, சுற்றுச்சூழலும் பாதிக்கப்பட்டு வேளாண்மை பிரச்சினைக்குரியதாகிவிட்டது” என்று ஆழமான கருத்தைப் பதிவு செய்தார் இன்ப சேவா சங்கத் தலைவர் முனைவர் பாதமுத்து.

கருத்தரங்கின் நோக்கம் பற்றி பேசிய பெராஸ் இந்திய அமைப்பின் தலைவர் பெருமாள், “பால்டிக் கடலை சூழ்ந்துள்ள ஸ்வீடன், டென்மார்க், ஜெர்மனி, போலந்து, பின்லாந்து, ரஷ்யா, நார்வே போன்ற நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுகளால் பால்டிக் கடல் சீரழிந்தது. மீன்கள் செத்து மிதக்க ஆரம்பித்தன. பால்டிக் கடலை பழையபடி மீட்டெடுப்பதற்காக இந்த நாடுகளில் அரசு மற்றும் அரசுசாரா அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சியாளர்களுடன் பெராஸ் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டது. இதில் கிடைத்த வெற்றி, ஸ்வீடனில் கடந்த 30 ஆண்டுகளாக விவசாயப் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முயற்சிகளின் அனுபவங்களை உலகின் மற்றப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தும் நோக்கில், இந்தியாவில் கடந்த 2 ஆண்டுகளாகப் பெராஸ் அமைப்பு செயல்பட்டுவருகிறது” என்றார்.

கருத்தரங்கின் நோக்கம் பற்றி பேசிய பெராஸ் இந்திய அமைப்பின் தலைவர் பெருமாள், “பால்டிக் கடலை சூழ்ந்துள்ள ஸ்வீடன், டென்மார்க், ஜெர்மனி, போலந்து, பின்லாந்து, ரஷ்யா, நார்வே போன்ற நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுகளால் பால்டிக் கடல் சீரழிந்தது. மீன்கள் செத்து மிதக்க ஆரம்பித்தன. பால்டிக் கடலை பழையபடி மீட்டெடுப்பதற்காக இந்த நாடுகளில் அரசு மற்றும் அரசுசாரா அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சியாளர்களுடன் பெராஸ் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டது.

இதில் கிடைத்த வெற்றி, ஸ்வீடனில் கடந்த 30 ஆண்டுகளாக விவசாயப் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முயற்சிகளின் அனுபவங்களை உலகின் மற்றப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தும் நோக்கில், இந்தியாவில் கடந்த 2 ஆண்டுகளாகப் பெராஸ் அமைப்பு செயல்பட்டுவருகிறது" என்றார்.

**மண் வளமே மூலதனம்**

"உலகில் உற்பத்தி செய்யப்படும் 95 சதவிகித உணவுக்கு மண்தான் அடிப்படை. ஒரு நாட்டின் மூலதனம் என்பது, அந்நாட்டு விவசாயிகளால் பராமரிக்கப்படும் மண்ணில்தான் இருக்கிறது.

உலக அளவில் ரசாயன உரங்களின் பயன்பாடு பல ஆயிரம் மடங்கு அதிகரித்துவிட்டது. மண்வளத்தைப் புறக்கணித்துவிட்டு, விளைச்சலில் மட்டுமே கவனம் செலுத்தியதால்தான் சுற்றுச்சூழலுக்கு மட்டுமின்றி, நம் உடல்நலனுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த மண்ணில் இருந்து எந்த அளவுக்கு சத்தை எடுக்கிறோமோ, அந்த அளவுக்குத் திரும்பக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பூமியையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க முடியும்.

அரிசியை மட்டும் எடுத்துவிட்டு வைக்கோல், உமி போன்றவற்றை எரிப்பது சுற்றுச்சூழலுக்குக் கேடு தரும். அதை மட்க வைத்து, அதே நிலத்துக்கு உரமாகத் தர வேண்டும்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் தனி மனிதர்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்வது அவசியம். இவை எல்லாம் ஏற்கெனவே இந்தியாவில் நடைமுறையில் இருந்தவைதான். அவற்றை அறிவியல்பூர்வமாக மேம்படுத்தி, மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டுவருவதும், அறிவைப் பரிமாறிக்கொள்வதும்தான் எங்கள் நோக்கம்" என்றார் பெராஸ் சர்வதேச அமைப்பின் தலைவர் ஜோஸ்டின்.

**தொழில்நுட்பம் மட்டும் உதவாது**

நிகழ்ச்சியில் உயிர்ச்சூழல் மறுஉருவாக்க வேளாண்மை குறித்து, இந்திய உயராற்றல் மேலாண்மை அமைப்பு ஜெயகரன் பேசுகையில், "அடுத்த 20 ஆண்டுகளில் 70 சதவீத மக்கள் நகரங்களுக்கு இடம்பெயர்வார்கள். எல்லாவற்றையும் தொழில்நுட்பங்கள் மூலம் சரி செய்துவிடலாம் என்று

அலட்சியமாக இருக்காமல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை இப்போதே தொடங்க வேண்டும்” என்றார்.

நிகழ்ச்சியில் காந்தி கிராமப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.மார்க்கண்டன், சேஷாத்ரி, ஜெரோம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.___

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் விடிய விடிய மழை



தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் நேற்று இரவு முழுவதும் மழை பெய்தது. இதனால் பல்வேறு இடங்களில் மழை நீர் தேங்கி உள்ளது.

வங்க கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் நேற்று இரவு முதல் மழை பெய்து வருகிறது.

திண்டுக்கல்லில் நேற்று இரவு 7 மணிக்கு தொடங்கிய மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் நகரின் பல்வேறு இடங்களில் மழை நீர் தேங்கி உள்ளது. புத்தக கண்காட்சி நடக்கும் டட்லி பள்ளி மைதானத்தில் தண்ணீர் குளம்போல் தேங்கியுள்ளது.

புத்தக அரங்குகள் பகுதிக்குள்ளும் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. கண்காட்சிக்கு வந்த பொதுமக்கள் சிரமப்பட்டனர். இதையடுத்து நேற்று இரவு நடைபெறுவதாக இருந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன.

கொடைக்கானலிலும் விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதன்காரணமாக பெருமாள்மலை அருகே வத்தலக்குண்டு சாலையில் மரம் முறிந்து விழுந்தது. வாகன ஓட்டிகளே அவற்றை வெட்டி அப்புறப்படுத்தினர். தொடர்ந்து மழை பெய்து வருவதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகள் வருகையும் குறைந்து விட்டது.

இதுபோன்று மாவட்டத்தில் உள்ள ஒட்டன்சத்திரம், பழனி, வேடசந்தூர், வடமதுரை, குஜிலியம்பாறை, செம்பட்டி, நத்தம், வத்தலக்குண்டு, கொடைரோடு உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து சற்று அதிகரித்து வருகிறது.

தேனி மாவட்டத்திலும் நேற்று இரவு தொடங்கிய மழை தொடர்ந்து பெய்து வருகிறது. தேனி, கம்பம், கூடலூர், உத்தமபாளையம், சின்னமனூர், பெரியகுளம், போடி, தேவாரம், ஆண்டிப்பட்டி, உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் மழை பெய்தது. அதிகபட்சமாக சண்முகாநதி அணைப்பகுதியில் 41 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. உத்தமபாளையத்தில் 38 மி.மீ., கொடைக்கானலில் 28 மி.மீ, சோத்துப்பாறை அணைப்பகுதியில் 22 மி.மீ., மஞ்சளாறு அணைப்பகுதியில் 20 மி.மீ., கூடலூரில் 15 மி.மீ., வைகை அணைப்பகுதியில் 12 மி.மீ., வீரபாண்டியில் 10 மி.மீ., மழை பெய்துள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் மக்கள் வெளியே நடமாட முடியவில்லை. தொழிலாளர்கள் வேலைக்கு செல்லவில்லை. இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

## மீனவர்கள் வலையில் அதிகம் சிக்குவதால் இறால், நண்டு விலை வீழ்ச்சி



சென்னை

மீனவர்கள் வலையில் அதிகம் சிக்குவதால் இறால், நண்டு விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

மீன் விலை குறைவு வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் பரவலாக பெய்து வருகிறது. சென்னையிலும் மழை வெளுத்து வாங்கியது. இதனால், மீனவர்கள் கடலுக்கு செல்வதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டு, மீன்வரத்து குறைந்தது. பொதுவாக மீன்வரத்து குறைந்தால், அதன் விலை அதிகரிக்கும். ஆனால் கடந்த சில நாட்களாக மீன்வரத்து குறைந்திருந்தும் அதன் விலை அதிகரிக்கவில்லை. மாறாக குறைந்துகொண்டே இருக்கிறது. இதற்கு முக்கிய காரணமாக, மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதாகவும், இதனால் மீன் விற்பனை மந்தமாகி விலை குறைந்திருப்பதாகவும், வியாபாரிகள் கூறுகின்றனர். மேலும், கடலுக்கு செல்லும் மீனவர்களின் வலையில் அதிகம் இறால், நண்டு சிக்குவதால், அதன் வரத்து அதிகமாக இருக்கிறது. இதனால் அதன் விலையும் வீழ்ச்சி

அடைந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து மொத்த மீன் வியாபாரிகள் டி.பன்னீர் செல்வம், எம்.சி.பி.சதீஷ் ஆகியோர் கூறியதாவது:- இறால், நண்டு விலை வீழ்ச்சி சென்னையில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் கடலுக்குள் மீன் பிடிக்க மீனவர்கள் குறைந்த அளவிலேயே செல்கின்றனர். இதன் காரணமாக மீன்வரத்து மிகவும் குறைந்த அளவிலேயே இருக்கிறது. மீன்வரத்து குறைவாக இருந்தும், அதன் விலை குறைவாக தான் இருக்கிறது. மழையால் மீனவர்கள் மட்டும் அல்லாது, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றிலும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் இன்னும் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை. இதனால் மீன் வியாபாரம் மந்தமாகவே உள்ளது. மேலும், கார்த்திகை மாதம் தொடங்கியதையடுத்து, சபரிமலைக்கு மாலை அணிந்து, விரதம் இருப்பார்கள். அவர்களும் மீன் சாப்பிடுவதை தவிர்ப்பதாலும் விற்பனை குறைந்துள்ளது. இருப்பினும், தற்போது கடலுக்கு செல்லும் மீனவர்களின் வலையில் இறால், நண்டு அதிகளவில் சிக்குகிறது. வரத்தும் அதிகமாகவே இருக்கிறது. இதன் காரணமாக அதன் விலை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆந்திரா கடல்பகுதியில்...இறால் அதிகளவில் மீனவர்கள் வலையில் சிக்குவதற்கு முக்கிய காரணம், ஆந்திராவில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த கனமழையினால், அங்கு கடலில் அமைக்கப்பட்டிருந்த இறால் பண்ணைகளில் உடைப்பு ஏற்பட்டது. இதனால் பண்ணையில் வளர்க்கப்பட்ட இறால்கள் அனைத்தும், கடலுக்குள் சென்றுவிட்டன. இதன் காரணமாக, கடலுக்குள் மீன்பிடிக்க செல்லும் மீனவர்களின் வலையில் அதிகளவு இறால் சிக்குகிறது. இதனுடன் நண்டும் அதிகளவில் வலையில் சிக்குகிறது.

கடந்த வாரத்தில் ஒரு கிலோ இறால் ரூ.250 முதல் ரூ.400 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு கிலோ இறால் ரூ.100 முதல் ரூ.300 வரை விற்பனை ஆகிறது. அதே போல், கடந்த வாரத்தில் ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.150 வரை விற்பனை செய்யப்பட்ட நண்டு, தற்போது ஒரு கிலோ ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப்படுகிறது. விலை நிலவரம்

சென்னை மீன் மார்க்கெட்டுகளில் நேற்று விற்பனை செய்யப்பட்ட மீன்களின் விலை நிலவரம்(ஒரு கிலோ) வருமாறு:- வஞ்சிரம் மீன் - ரூ.300 முதல் ரூ.400 வரை, இறால் - ரூ.100 முதல் ரூ.300 வரை, நண்டு - ரூ.70 முதல் ரூ.80 வரை, பாறை - ரூ.150, சீலா - ரூ.150 முதல் ரூ.200 வரை, அயிலா - ரூ.70 முதல் ரூ.100 வரை, மத்தி - ரூ.60, கிளிச்சை - ரூ.60, கருப்பு வவ்வால் - ரூ.350, கடமான் - ரூ.140, நெத்திலி - ரூ.140, சுறா - ரூ.100 முதல் ரூ.300 வரை, கொடுவாய் - ரூ.700, கொருக்கை - ரூ.360, வாழை - ரூ.165. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மழை மனிதர்



'அய்யய்யோ இவ்வளவு மழையா!' என்று பயப்படுகிறவர்கள் ஒருபுறம். 'கொட்டிய மழை எல்லாம் கடலுக்கு போகிறதே!' என்று கவலைப்படுகிறவர்கள் மறுபுறம்! இப்படிப்பட்ட இரு சாராருக்கும் மத்தியில், மழை நீரை சேமித்து மாபெரும் புரட்சியை சத்தமில்லாமல் செய்துகொண்டிருக்கிறார், திருவாரூர் கி.வரதராஜன். வயது 70. இவர் ஓய்வு பெற்ற பொதுப்பணித்துறை என்ஜினீயர். தனது வீட்டையே ஒரு மாடலாக உருவாக்கி, 43 ஆயிரம் லிட்டர் மழை நீரை சேகரித்து வைத்திருக்கிறார். வருடம் முழுக்க அதையே பயன்படுத்துகிறார். இவர் சொல்லும் வழிமுறைகளை பின்பற்றினால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு

ஏற்படாது. வீடுகள் தண்ணீருக்குள் மூழ்காது. நாட்டில் தண்ணீர் பஞ்சமும் ஏற்படாது.

"நான் அரியலூர் அருகே உள்ள கீழப் பழுவூர் கிராமத்தை சேர்ந்தவன். அங்குதான் பூமா தேவிக்கு ஏற்பட்ட சாபம் நீங்கியதாக கூறுவார்கள். திருச்சி சேஷாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் சிவில் என்ஜினீயரிங் படித்தேன். பின்பு தொழில்நுட்ப இயக்குனரகத்தில் தொழில்நுட்பப் பணி உதவியாளராக வேலை பார்த்தேன். அடுத்து பொதுப்பணித்துறையில் இளநிலை பொறியாளராக பணியாற்றி வந்த நான், 2002–ம் ஆண்டு மழை நீரை சேமிப்பது பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவே விருப்ப ஓய்வு பெற்றேன். வீடுகள், அலுவலகங்கள், விளை நிலங்கள் என இதுவரை 2,548 இடங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கி இருக்கிறேன். மழைநீர் பற்றிய ஆராய்ச்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன். ஆந்திரா, கர்நாடகம், புதுச்சேரி உள்பட தென் மாநிலங்கள் முழுவதும் சென்று மழை நீர் சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வு பிரசாரம் செய்து இருக்கிறேன்"

உங்களுக்கு எப்படி இதில் ஆர்வம் வந்தது?

"நான் பிறந்த கிராமத்தில் பஸ் நிறுத்தம் அருகே ஆலந்துறையார் கோவில் எதிரே ஒரு குளம் உள்ளது. அதற்கு ஆள் இறங்கா குளம் என்று பெயர். அந்த குளத்தின் நீரை குடிக்க மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பது எங்கள் முன்னோர் வகுத்த மரபு. ஆகையால் நாங்கள் யாரும் அந்த குளத்தில் குளிக்க மாட்டோம். அசுத்தம் செய்ய மாட்டோம். குளத்தின் நீர் மண்ணின் நிறமான செந் நிறத்தில் இருக்கும். அதை ஒரு பாத்திரத்தில் நிரப்பினால், சிறிது நேரத்தில் தெளிந்த நீராக மாறும். அந்த நீரை குடித்தாலே, முழு சாப்பாடு சாப்பிட்ட உற்சாகம் பிறக்கும். அதற்கு காரணம் அந்த குளத்தில் மழை நீரை முறையாக சேகரித்தது தான்.

அந்த ஆள் இறங்கா குளம் தான் எனக்குள் மழை நீரை சேகரிக்கும் ஆர்வத்தை உருவாக்கியது. 15 ஆண்டுகள் பொதுப்பணித்துறையின் நீரியல் கோட்டத்தில்

தஞ்சை மாவட்டத்தில் பணிபுரிந்தேன். அப்போது கிணறுகளிலும், ஆழ்குழாய் கிணறுகளிலும் நீர் மட்டத்தின் ஏற்றம், இறக்கம் எவ்வாறு இருக்கிறது? என்பதை கணக்கிடுவது எனது பணி. அது மழை நீர் சேகரிப்பின் அவசியத்தை எனக்கு உணர்த்தியது.

மழை நீரை சேகரித்தால் வறட்சி நேரத்திலும் குடிநீர் பஞ்சம் ஏற்படாது. வறட்சி பகுதியில் 3 பேரை கொண்ட ஒரு குடும்பம் வசிப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அந்த குடும்பத்தின் குடிநீர் தேவையை ஆயுள் முழுவதும் பூர்த்தி செய்ய, 300 சதுர அடி கொண்ட வீட்டின் மேல் கூரை போதும். அந்த மேல்கூரையில் ஆண்டுக்கு சராசரியாக 300 மில்லி மீட்டர் அளவில் மழை நீர் விழுந்தாலே, தேவைக்கு குடிநீர் கிடைத்துவிடும். இந்தியா முழுவதும் ஆண்டுக்கு சராசரியாக 950 மில்லி மீட்டர் மழையும், தமிழ்நாட்டில் 1050 மில்லி மீட்டர் மழையும் பெய்து வருகிறது. எனவே 300 மில்லி மீட்டர் மழை என்பது அனைத்து இடங்களிலும் பெய்யும் சாதாரண அளவை விட குறைவானதுதான்.
மழை நீரை சேமிப்பது பற்றி அரசுக்கு 3 யோசனைகளை ஏற்கனவே தெரிவித்து இருக்கிறேன். அவை: ஏரி, குளங்களில் மழை நீரை சேகரிப்பது. விளை நிலங்களில் மழை நீரை சேகரிப்பது. ஒரு நகரத்தில் ஒரு வார்டை தேர்வு செய்து அங்குள்ள அரசு அலுவலகங்களிலும், அரசு ஊழியர்களின் வீடுகளிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குவது. இவற்றை அரசு தீவிரமாக செயல்படுத்தினால் மழை நீர் வீணாகாது. ஒவ்வொருவரும் தங்களுக்கு தேவையான குடிநீரை தாங்களே சேமித்து வைத்து கொள்ள முடியும்''

## எந்த மண்ணில் மழை நீரை அதிகம் தேக்க முடியும்?

''மணலும், வண்டல் மண்ணும் தண்ணீரை தேக்கி வைக்கும் திறன் படைத்தவை. பாறை, சுக்கான், களிமண் உள்ளிட்டவை தண்ணீரை தேக்கி வைக்காது. தண்ணீரை தேக்கி வைக்க திறன் இல்லாத மண் வகைகளே தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் காணப்படுகிறது. எனவே தமிழ

கத்தில் மழை நீர் சேமிப்பு என்பது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமை.

ஆயிரம் சதுர அடி மேற்கூரையில், ஆண்டுக்கு சராசரியாக ஆயிரம் மில்லி மீட்டர் மழை பெய்தால் ஒரு லட்சம் லிட்டர் மழை நீரை சேமிக்கலாம். இந்த வழி முறையை வீணாக கிடக்கும் புறம்போக்கு நிலத்தில் கூட செயல்படுத்த முடியும். இவ்வாறு செயல்படுத்தினால் மழை அதிகமாக பெய்வதால் ஏற்படும் வெள்ள பாதிப்பை தடுக்கலாம். விவசாயிகள் தங்கள் பொருளாதார வசதிக்கு ஏற்றாற்போல் தங்கள் விளை நிலத்தின் ஒரு பகுதியில் மழை நீரை சேகரிப்பதற்கான பசுமை குட்டைகளை உருவாக்க வேண்டும்''

**மழை நீரில் நீங்கள் ஆராய்ச்சி செய்து கண்டறிந்த விஷயம்?**

''மழை நீர் மிக தூய்மையானது. ஏற்கனவே சேகரித்து வைத்த மழை நீரை நீண்ட நாட்கள் திறந்த வெளியில் வைத்திருந்தால் அதில் பூச்சி, புழுக்கள் தோன்றும். அந்த மழை நீர் மீது மீண்டும் மழை பெய்தால் அதில் 80 சதவீத பூச்சி, புழுக்கள் அழிந்து விடும். அதே நீரில் மீண்டும் மழை பெய்தால் 100 சதவீத பூச்சி, புழுக்களும் அழிந்து விடும். இது நான் ஆராய்ந்து கண்டறிந்த உண்மை. இந்த வழிமுறையை வேதாரண்யம் அருகே உள்ள கோடியக்கரை கலங்கரை விளக்கத்தில் பணியாற்றும் ஊழியர்கள் பின்பற்றி மழை நீரை, குடிநீராக பயன்படுத்தி வருகிறார்கள்''

**மழை நீரை சேகரிக்க, நீங்கள் உருவாக்கியிருக்கும் கட்டமைப்புகளை பற்றி கூறுங்கள்?**

''விளைநிலம், ஆறு, ஏரி, குளம், அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நான் உருவாக்கி இருக்கிறேன். குடியிருப்பு கட்டிடத்தின் மேல் பகுதியில் வடிதொட்டியை அமைக்க வேண்டும். வடி தொட்டியில் இருந்து மழைநீர் கண்டெய்னருக்கு செல்லும் வகையில் குழாய் இணைப்பு ஏற்படுத்த வேண்டும். இதில் நிரம்பும் மழை நீரை 'சம்ப்' எனப்படும்

நிலத்துக்கு அடியில் கட்டப்பட்ட தொட்டியில் குழாய் மூலம் செலுத்தலாம்.

மேற்கூரையில் தேவைக்கு ஏற்ப வடிதொட்டிகளை அமைத்து அதற்கான இணைப்புகளை உருவாக்க வேண்டும். சேகரிக்கும் மழை நீர் பல ஆண்டுகள் கெடாமல் இருக்க, அதன் மீது காற்றும், வெப்பமும் படாமல் இருக்க வேண்டும். இதற்கான நவீன கலன்கள் சந்தையில் கிடைக்கின்றன. 3 பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு தேவையான மழைநீர் கட்டமைப்பை உருவாக்க ரூ.25 ஆயிரம் வரை செலவாகும். இந்த செலவுக்கு பிறகு வாழ்நாள் முழுவதும் குடிநீருக்கு என தனியாக செலவு செய்ய தேவையில்லை. இதை உணர்ந்து பலர் தற்போது தங்கள் வீடுகளில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக என்னிடம் ஆலோசனை கேட்கிறார்கள்.

குடிக்க தகுதி உள்ள நீர் இருக்கும் நாடுகள் பற்றிய கணக்கெடுப்பை ஐக்கிய நாடுகள் சபை சமீபத்தில் நடத்தியது. இதில் 122 நாடுகளில் இருந்து குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வு முடிவில் இந்தியாவுக்கு 120–வது இடம் கிடைத்தது. அதாவது இந்தியாவில் உள்ள நீரானது குடிக்க தகுதியானதாக இல்லை. இதை கருத்தில் கொண்டு தூய்மையான குடிநீர் ஆதாரத்தை உருவாக்க அரசு அக்கறை காட்ட வேண்டும். மழை குறைவாக பெய்தாலும், இஸ்ரேல் போன்ற நாடுகளில் கிடைக்கும் மழைநீரை சேகரித்து சக்தி வாய்ந்த மோட்டார்கள் மூலமாக நிலத்தடியில் செலுத்துகிறார்கள். நாம் இயற்கையான முறையிலே செலுத்தி, தூய்மையான நீர் ஆதாரத்தை பெருக்கவேண்டும்.

‘ஆற்று நீர் வாதம் போக்கும். அருவி நீர் பித்தம் போக்கும். குளத்து நீர் கபம் போக்கும். சோற்று நீர் மூன்றையும் போக்கும்’ என்கிறது சித்தர் பாடல் ஒன்று. வாதம், பித்தம், சிலேத்துமம், ரோகம், கபம் ஆகிய 5 நோய்களில் மூன்றை நீரே குணப்படுத்துகிறது. எனவே குடிக்கும் நீரை தூய்மையாக வைத்திருப்பது நமது கடமை. மழை நீர் கட்டமைப்புகளை உருவாக்கி தூய்மையான நீரை சேகரிக்கலாம்’’ என்றார், மழை மனிதர் வரதராஜன்.

இவரது மனைவி ரோசாலிசுசீலா மரணமடைந்து விட்டார். மகன் சுரேஷ், மகள் லதா. மருமகள் பரிமளா. வரதராஜன் திருவாரூர் ஜி.டி. நகரில் வசித்து வருகிறார்.

வரதராஜனின் மருமகள் பரிமளா சமையலுக்கு மழை நீரையே பயன்படுத்துகிறார். சமையல் அறையில் வைக்கப்பட்டுள்ள சிறு சிறு கலன் களில் மழை நீரை நேரடியாக சேகரிக்கும் வகையிலான கட்டமைப்பை வரதராஜன் உருவாக்கி யிருக்கிறார். மழை நீரை சமையல் பாத்திரத்தில் பிடிப்பதற்கென தனி குழாயும் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கட்டமைப்பிற்கு "அடுக்களையில் அமிர்தம்" என்ற பெயரையும் அவர் வைத்திருக் கிறார். வீட்டின் தரை தளத்தில் இவர் சேகரித்த மழை நீர் ஏராளமான கலன்களில் அடைத்து காற்று, ஒளி படாத வகையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அடை மழை பெய்யும்போது நீரை சேகரிக்கும் விதத்தில் தனது வீட்டு தரை தளத்தையும் அமைத்திருக்கிறார்.

**வங்கக்கடல் பகுதியில் மேலும் ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை; வட மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும்**



சென்னை,

இலங்கை அருகே உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் நிலவுகிறது. புதிய காற்றழுத்த தாழ்வு நிலை அந்தமான் அருகே உருவாகி உள்ளது.

புதிய காற்றழுத்த தாழ்வுநிலை

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

நேற்று முன்தினம் தென் மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, அதே இடத்தில் நீடிக்கிறது. இந்த நிலையில் தென் கிழக்கு வங்கக்கடலில் அந்தமான் கடல் பகுதியில், புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இது அடுத்த 24 மணிநேரத்தில் தாழ்வு பகுதியாக வலுவடைய வாய்ப்பு உள்ளது.

வட மாவட்டங்களில் கனமழை

இந்த இரு நிகழ்வு காரணமாக அடுத்த 24 மணிநேரத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் சில இடங்களில் மழை பெய்யும். குறிப்பாக வட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். சென்னையில் வானம் மேக மூட்டமாக இருக்கும். நகரின் சில பகுதியில் கனமழை பெய்யும். அந்தமான் அருகே உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தமிழகம் அருகே வந்தால், தமிழ்நாட்டில் 3 நாட்களுக்கு கன மழைக்கு வாய்ப்பு உள்ளது. இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

மழை அளவு

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் கன்னிமாரில் 14 செ.மீ. மழையும், பூதப்பாண்டியில் 4 செ.மீ. மழையும், பாபநாசமில் 3 செ.மீ. மழையும், காட்டுக்குப்பம், மகாபலிபுரம், செங்கோட்டை தலா 2 செ.மீ.

மழையும், மயிலாடி, மயிலாடுதுறை, நாகர்கோவில், செங்கல்பட்டு, கேளம்பாக்கம், தாமரைப்பாக்கம் தலா 1 செ.மீ. மழையும் பெய்துள்ளது.

## தமிழகத்தில் பரவலாக மழை: கடலூர்-புதுச்சேரியில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை



கடலூர்,

தமிழகத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. இந்த மழை காரணமாக கடலூர் மாவட்டத்தில் பள்ளி-கல்லூரிகளுக்கு இன்று (திங்கட்கிழமை) விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் பரவலாக மழை

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை காரணமாக பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வங்க கடல் பகுதியில் 2 காற்றழுத்த தாழ்வுநிலை நீடித்து வருவதால் கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் நேற்று பரவலாக மழை

பெய்தது.

கடலூரில் பள்ளிகளுக்கு விடுமுறை

வடகிழக்கு பருவமழையால் அதிக மழை சேதம் ஏற்பட்ட கடலூர் மாவட்டத்தில் நேற்று காலையில் சாரல் மழை பெய்தது. பகல் 12 மணி வரை விட்டுவிட்டு மழை பெய்தது. பின்னர் வெயில் அடித்தது. மாலை 5 மணிக்கு மேல் கடலூரில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. இந்த மழை தொடர்ந்து நள்ளிரவு வரை நீடித்தது.

இந்த மழை பரங்கிப்பேட்டை, சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், அண்ணாமலைநகர், விருத்தாச்சலம் உள்பட மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்தது.

இதன்காரணமாக கடலூர் மாவட்டத்தில் பள்ளி-கல்லூரிகளுக்கு இன்று (திங்கட்கிழமை) விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கலெக்டர் அறிவித்து உள்ளார். உள்ளாட்சி பெண்பிரதிநிதி மகளுடன் பலி

விழுப்புரம் மாவட்ட திருக்கோவிலூரை அடுத்த கொழுந்திராம்பட்டு கிராமத்தை சேர்ந்தவர் சிமியோன். விவசாயி. இவரது மனைவி லூர்துமேரி(வயது45). இவர் ஊராட்சி மன்ற துணைத்தலைவியாக இருந்து வந்தார். இவர்களது மகள் மகிமைமேரி(18) அரசு கலைக்கல்லூரியில் படித்து வந்தார். சிமியோன் உறவினர் ஒருவரை பார்க்க சென்னை சென்றார். இரவில் தாயும் மகளும் வீட்டில் படுத்து தூங்கினர். நேற்று காலையில் அவர்களது வீட்டுக்கதவு நீண்டநேரம் ஆகியும் திறக்கப்படாதது கண்டு அக்கம்பக்கத்தினர் வீட்டுக்கதவை உடைத்து பார்த்தனர். அப்போது வீட்டு உள்ளே இருந்த சுவர் இடிந்து விழுந்த நிலையில் லூர்துமேரியும், மகிமைமேரியும் இடிபாடுகளில் சிக்கி பிணமாக கிடப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் இதுபற்றி அதிகாரிகளுக்கு அவர்கள் தகவல் கொடுத்தனர்.

திருச்சி-தஞ்சை

திருச்சியில் நேற்று மாலையில் பலத்த மழை பெய்து. இதனால் சாலைகளில் மழை வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

தஞ்சை மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழையினால் கும்பகோணம், திருவிடைமருதூர், ஒரத்தநாடு, திருவையாறு, அம்மாப்பேட்டை வட்டாரங்களில் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. நேற்றுமுன்தினம் மழை பெய்யாததால் வயல்களில் இருந்து தண்ணீர் வடிய தொடங்கியது.

இந்த நிலையில் தஞ்சையில் நேற்று காலை 7 மணி அளவில் திடீரென பலத்த மழை பெய்தது. சிறிது நேரம் நீடித்த இந்த மழை பின்னர் சாரல் மழையாக பெய்தது. பிற்பகலில் இடி-மின்னலுடன் பலத்த மழை பெய்தது. தொடர்ந்து மழை பெய்வதும் நிற்பதுமாக இருந்தது.

இந்த மழையின் காரணமாக சம்பா, தாளடி நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பயிர்கள் மீண்டும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தால் கவலை அடைந்துள்ளனர்.

திருவாரூரில் நேற்று லேசான மழை பெய்தது. இதேபோல மாவட்டத்தில் குடவாசல், நன்னிலம், நீடாமங்கலம், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சாரல் மழை பெய்தது.

கடையத்தில் கன மழை

நெல்லை மாவட்டம் கடையம், பொட்டல்புதூர் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவில் கனமழை பெய்தது. இதனால் மழை வெள்ளம் சாலைகளில் ஓடியது. ஏற்கனவே பெய்த மழையால் பெரும்பத்துகுளம், புதுக்குளம், பள்ளிவாசல்பத்துகுளம் ஆகியவை நிரம்பி உபரி நீர் மறுகால் பாய்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் கனமழையால் அதிகப்படியான நீர்வரத்தினால் ஏற்பட்ட காட்டாற்றுவெள்ளமும் குளங்களில் வெளியேறிய தண்ணீரும் சேர்ந்து பொட்டல்புதூர்-நெல்லை சாலையை மூழ்கடித்தது. மேலும் அந்த பகுதிகளில்

உள்ள வயல்வெளிகளிலும் மழை வெள்ளம் புகுந்தது. இதனால் நெல் பயிர்கள் அடித்துச்செல்லப்பட்டும், தண்ணீரில் மூழ்கியும் சேதம் அடைந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

இதேபோல குற்றாலம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலையில் பெய்த மழையால் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நேற்று மழை இல்லாததால் அருவிகளில் வெள்ளம் குறைந்தது. இதன்காரணமாக சுற்றுலா பயணிகள் மற்றும் அய்யப்ப பக்தர்கள் குற்றால அருவிகளில் குளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

குமரியில் மழை

குமரி மாவட்டத்தில் சில நாட்களாக ஓய்ந்திருந்த மழை மீண்டும் 3 நாட்களாக பெய்து வருகிறது. நேற்று முன்தினம் நாகர்கோவில் உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. ஆனால் நேற்று மாவட்டத்தில் மழை பெய்யவில்லை.

புதுவையில் பள்ளிகளுக்கு விடுமுறை

புதுவையில் நேற்று பரவலாக மழை பெய்தது. இந்த மழை காரணமாக புதுவையில் இன்று (திங்கட்கிழமை) பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

## விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பெரியாறு, அமராவதி அணைகள் இன்று திறப்பு; ஜெயலலிதா உத்தரவு



சென்னை,

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பெரியாறு அணை மற்றும் அமராவதி அணை இன்று திறக்கப்படுகிறது.முதல்-அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

பெரியாறு அணை

தேனி மாவட்டம், பெரியாறு அணையிலிருந்து கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்களின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு விவசாயிகளிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

விவசாயிகளின் வேண்டுகோளினை ஏற்று, பெரியாறு அணையிலிருந்து கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால்களின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கு பாசனத்திற்காக இன்று( திங்கட்கிழமை) முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தேனி மாவட்டம், தேனி மற்றும் உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள 5,146 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

அமராவதி அணை

திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயிகளிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயிகளின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களிலுள்ள அமராவதி பாசன அமைப்பின்கீழ் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு இன்று முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 54,637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி உத்தவ் தாக்கரே வழங்கினார்



மும்பை,

மரத்வாடா மண்டலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே நிவாரண உதவி வழங்கினார்.

விவசாயிகளுக்கு நிவாரணம்

மரத்வாடா மண்டலத்தில் வறட்சி, பருவம் தவறிய கனமழை மற்றும் ஆலங்கட்டி மழையால் பயிர் நாசம் அடைந்து தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் விவசாயிகளை சந்தித்து, அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே திட்டமிட்டார்.

இதையொட்டி, நேற்று அக்கட்சியின் எம்.எல்.ஏ.க்களுடன் பர்பானி மாவட்டம் சென்ற அவர், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளை சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போது, விவசாயிகளின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 ஆயிரம் நிவாரண உதவியும், அத்தியாவசிய பொருட்களும் அளித்தார்.

பின்னர், நிருபர்களிடம் பேசிய உத்தவ் தாக்கரே, ''வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பக்கபலமாக சிவசேனா எப்போதும் இருக்கும். அவர்களது குழந்தைகளின் கல்வி கட்டண செலவை நாங்கள் ஏற்கிறோம்'' என்றார்.

<u>அதிகாரிகளுடன் சந்திப்பு</u>

இதைத்தொடர்ந்து மாவட்ட கலெக்டர்கள், மாவட்ட பஞ்சாயத்து தலைமை நிர்வாக அதிகாரிகள், வருவாய் மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் ஆகியோரை சந்தித்து ஆலோசனை நடத்தினார். தவிர, வறட்சி நிலையை எதிர்கொள்ள மத்திய, மாநில அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், தண்ணீர் டேங்குகளின் செயல்பாடுகள் மற்றும் வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு கிடைத்த பலன் ஆகியவற்றையும் உத்தவ் தாக்கரே தலைமையிலான குழுவினர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

**புதுவையில் பலத்த மழையால் விவசாய பயிர்கள் அதிக அளவில் நாசம்; ஒரு வாரத்திற்குள் அறிக்கை தாக்கல் வெள்ள சேதங்களை பார்வையிட்ட மத்திய குழு தலைவர் பிரசாத் பேட்டி**



புதுச்சேரி

புதுவையில் பலத்த மழையால் வெள்ளம் பாதித்த பகுதிகளை மத்திய குழுவினர்

நேற்று நேரில் ஆய்வு செய்தனர். இது பற்றி குழுவின் தலைவர் பிரசாத் கூறும்போது சேதம் தொடர்பான விரிவான அறிக்கை ஒரு வாரத்திற்குள் மத்திய அரசிடம் தாக்கல் செய்யப்படும் என்றும், புதுவையில் விவசாய பயிர்கள் அதிக அளவில் நாசமாகி உள்ளதாகவும் தெரிவித்தார்.

சேதம்

வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை கடந்த 9-ந் தேதி புதுவை அருகே மரக்காணம் பகுதியில் கரையை கடந்தது. இதனால் புதுச்சேரி, கடலூர், விழுப்புரம் உள்பட பல்வேறு மாவட்டங்களில் மிக பலத்த மழை பெய்தது. இந்த மழையால் புதுவையில் பல இடங்களில் வீடுகள், விவசாய பயிர்கள், சாலைகள் சேதம் அடைந்தன. அதன்பின் தொடர்ந்து பெய்த மழையாலும் சேதங்கள் அதிகரித்தன. 300-க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்தன. 2 பேர் உயிரிழந்தனர். அதிக அளவில் பொருட்சேதமும் ஏற்பட்டது.

இந்த நிலையில் முதல்-அமைச்சர் ரங்கசாமி, பிரதமர் நரேந்திரமோடிக்கு எழுதிய கடிதத்தில் புதுச்சேரி மாநிலத்தில் ரூ.182 கோடியே 45 லட்சத்து 44 ஆயிரம் அளவிற்கு வெள்ள சேதம் ஏற்பட்டதாகவும், மத்திய குழுவை உடனடியாக புதுச்சேரிக்கு அனுப்பி ஆய்வு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தார். இதனை தொடர்ந்து புதுவையில் வெள்ளசேதங்களை பார்வையிடுவதற்காக மத்திய அரசின் உள்துறை இணை செயலாளர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையில் 9 பேர் கொண்ட குழு நேற்று புதுவை வந்தது.

மத்திய குழு ஆய்வு

புதுச்சேரி செண்பகா ஓட்டலில் தங்கி இருந்த மத்திய குழுவினரை கலெக்டர் மணிகண்டன், வருவாய்துறை செயலாளர் கந்தவேலு மற்றும் அரசு அதிகாரிகள் சந்தித்து மழை சேத விவரங்களை விளக்கி கூறினர். அதன்பின் அங்கிருந்து மழை சேதங்களை பார்வையிட மத்திய குழு புறப்பட்டது. நேராக பாகூர் அருகே உள்ள பரிக்கல்பட்டு பகுதிக்கு சென்றனர். அங்கு வயல்வெளியில்

அழுகிய நிலையில் இருந்த நெற் பயிர்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் கொமந்தான்மேடு பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தரைப்பாலத்தை பார்வையிட்டனர். அந்த பகுதியில் ஆற்றின் கரையோரம் மணல் அரிப்பு ஏற்பட்ட இடத்தை பார்த்தனர். மேலும் பாலம் உடையாமல் இருப்பதற்காக மணல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்ததையும் பார்வையிட்டனர்.

விளைநிலங்கள்

பின்னர் அங்கு மழைநீர் தேங்கி நின்ற விளைநிலங்களை பார்வையிட்டனர். அப்போது விவசாயிகள் அவர்களிடம் அழுகிய நிலையில் கிடந்த மரவள்ளிக்கிழங்குகளை காட்டி தங்களுக்கு நிவாரணம் வழங்கும் படி கோரிக்கை விடுத்தனர். இதற்கிடைய கல்வித்துறை அமைச்சரும், பாகூர் தொகுதி எம்.எல்.ஏ.வுமான தியாகராஜன் மத்திய குழுவினரை சந்தித்து பேசினார்.

அப்போது, “பாகூர் தொகுதியில் 200 ஹெக்டேருக்கு மேல் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. தென்பெண்ணை ஆற்றில் கொமந்தான்மேட்டில் கட்டப்பட்டுள்ள தரைப்பாலமும் இந்த கன மழையால் பாதிக்கப்பட்டுள்ளது. சாலைகளும் சேதம் அடைந்துள்ளன” என்று கூறினார். தொடர்ந்து மத்திய குழுவினர் அங்கிருந்து புறப்பட்டு அரங்கனூர் சென்றனர். அங்கு மழைநீர் தேங்கி கிடந்த நெல் வயல்களை பார்வையிட்டனர்.

பெண் புகார்

இதனை அடுத்து மத்திய குழுவினர் அங்கிருந்து புறப்பட்டு கோர்க்காடு கிராமத்திற்கு சென்றனர். அங்குள்ள விவசாயிகள் சாகுபடி செய்து 45 நாட்களே ஆன நிலையில் அழுகிப்போன நெற்பயிர்களை காண்பித்தனர். அப்போது விவசாயம் செய்யும் பெண் மீனாட்சி அந்த குழுவினரிடம் சரமாரியாக புகார்

கூறினார். அவர், "தொடர் மழையால் சேதம் அடைந்த பயிர்களை பார்வையிட அதிகாரிகள் வரவில்லை. விவசாயிகளை அதிகாரிகள் புறக்கணிக்கின்றனர். எங்கள் பகுதியில் நீர்வடிகாலாக விளங்கிய கால்வாய்களை முறையாக தூர்வாரி பராமரிக்கவில்லை. ரியல் எஸ்டேட் என்ற பெயரில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். விவசாயிகளுக்கு உரிய மரியாதை தர வேண்டும். மழையினால் விவசாயிகளுக்குத்தான் அதிக பாதிப்பு. கட்டுமான தொழிலாளர்களுக்கு வழங்கும் நிவாரணம் கூட விவசாய தொழிலாளர்களுக்கு வழங்குவது இல்லை." என்று குற்றம் சாட்டினார்.

விவசாயி முருகேசன் கூறும் போது, 'தாமதமாக பயிரிட்ட பயிர்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழுகி விட்டன. எனவே பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்' என்றார்.

பிள்ளையார்குப்பம்

தொடர்ந்து மத்திய குழுவினர் அங்கிருந்து புறப்பட்டு சேந்தநத்தம், உளவாய்க்கால் கிராமங்களுக்கு சென்றனர். அங்கு விவசாயிகள் கொண்டு வந்த சேதமடைந்த வெற்றிலை, பூச் செடிகள், காய்கறிகளை மத்திய குழுவினரிடம் காண்பித்தனர். அப்போது அங்கு வந்த புதுவை மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் நமச்சிவாயம் எம்.எல்.ஏ. மத்திய குழுவினரை சந்தித்து பேசினார். அவர், 'புதுவையில் மழையால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

பின்னர் மத்திய குழுவினர் வில்லியனூர் அருகே உள்ள பிள்ளையார்குப்பம் பகுதிக்கு சென்றனர். அங்கு மழையில் இடிந்து விழுந்த சேகர் என்பவரது வீட்டை பார்வையிட்டனர். மேலும் மழையால் சேதம் அடைந்த முத்தால், பூபாலன், கலியன், மணிபாலன் ஆகியோரது வீடுகளையும் பார்த்தனர். அப்போது அங்குள்ள பொதுமக்கள் மத்திய குழுவினரிடம், சங்கராபரணி

ஆற்றை தூர்வார வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

முதல்-அமைச்சருடன் சந்திப்பு

இதனை அடுத்து மத்திய குழுவினர் அங்கிருந்து புறப்பட்டு தலைமை செயலகத்திற்கு சென்றனர். அங்கு தலைமை செயலாளர் மனோஜ் பரிதாவை சந்தித்து ஆலோசனை நடத்தினர். அதன்பின் புதுச்சேரி சட்டசபை வளாகத்திற்கு சென்றனர். அங்கு முதல்-அமைச்சர் ரங்கசாமியை சந்தித்து பேசினர்.

அப்போது புதுச்சேரியில் தொடர்மழையால் ஏற்பட்ட சேத விவரங்களை முதல்-அமைச்சர் ரங்கசாமி, மத்திய குழுவினரிடம் விளக்கமாக எடுத்து கூறினார்.

ஒரு வார காலத்திற்குள்...

தொடர்ந்து மத்திய குழுவின் தலைவர் டி.வி.எஸ்.என்.பிரசாத், நிருபர்களிடம் கூறியதாவது:-

புதுச்சேரியில் ஏற்பட்ட வெள்ள சேதத்தை நேரில் சென்று பார்வையிட்டோம். பொதுமக்களிடமும் பாதிப்பு குறித்து கேட்டறிந்தோம். சேதம் குறித்து முறையான ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. புதுச்சேரி பகுதியில் துரதிருஷ்டவசமாக பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஏராளமாக பயிர்கள் நாசமாகி உள்ளன. வெள்ள சேத பாதிப்புகள் குறித்து விரிவான அறிக்கை தயாரித்து ஒரு வார காலத்திற்குள் மத்திய அரசிடம் தாக்கல் செய்யப்படும். அதன்படி மத்திய அரசின் நடவடிக்கை இருக்கும். இவ்வாறு டி.வி.எஸ்.என்.பிரசாத் கூறினார்.

## புதுச்சேரியில் கன மழை பள்ளிகளுக்கு இன்று விடுமுறை




புதுச்சேரி

புதுச்சேரியில் நேற்று கன மழை பெய்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது.

<u>கனமழை</u>

தென்மேற்கு வங்க கடலில் இலங்கை அருகே நிலை கொண்டிருந்த தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிக்கிறது. இந்த நிலையில் தென்கிழக்கு வங்கக்கடலில் தெற்கு அந்தமானில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதனால் தமிழகம் மற்றும் புதுவையில் இன்னும் நாட்களுக்கு கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் புதுச்சேரியில் நேற்று அதிகாலை முதல் மழை பெய்தது. இந்த மழை காலை 8 மணி வரை நீடித்தது. நேற்று பகல் முழுவதும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. நேற்று பகல் முழுவதும் மழை விட்டு விட்டு பெய்து கொண்டே இருந்தது.

<u>சாலைகளில் வெள்ளம்...</u>

இரவு 7 மணிக்கு மேல் பலத்த பெய்யத்தொடங்கியது. இந்த மழை நள்ளிரவு வரை நீடித்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழையால் பாவாணன் நகர், லாம்பர் சரவணன் நகர் உள்பட தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி நின்றது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். இந்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

பள்ளிகளுக்கு இன்று விடுமுறை

மழை காரணமாக புதுவையில் இன்று பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. இது

தொடர்பாக புதுச்சேரி கல்வித்துறை அமைச்சர் தியாகராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

புதுவையில் இன்று(திங்கட்கிழமை) கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருப்பதால் இன்று புதுவையில் உள்ள பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

[கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை]



கடலூர்

கடலூர் மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. இதன் எதிரொலியாக கடலூர் மாவட்டத்தில் இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வு நிலை

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை கடந்த மாதம் 28-ந்தேதி தொடங்கியது. அன்று முதல் கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதுவரை மாவட்டத்தில் சராசரியாக 69 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது. இது தற்போது பெய்ய வேண்டிய மழை அளவை விட அதிகம் ஆகும். இந்த மழையில் சிக்கி 75-க்கும் மேற்பட்டோர் பலியானார்கள். இது தவிர ஏராளமான கால்நடைகளும் உயிரிழந்தன. அடுத்தடுத்து கொட்டி தீர்த்த கனமழையால் மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு தற்போது தான் அதில் இருந்து மீளும் நிலை உருவானது.

இந்த நிலையில் தென் கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த புதிய காற்றழுத்த தாழ்வு நிலை, மேற்கு நோக்கி நகர்ந்து, தென் மேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு நிலையாக நீடித்து வருவதால் கடலோர மாவட்டங்களில் கன மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்தது.

மழை

அதன்படி, கடலூரில் நேற்று காலை லேசான சாரல் மழை பெய்தது. அதன்பிறகு பகல் 12 மணி வரை விட்டு, விட்டு மழை பெய்தது. சில நேரங்களில் வெயிலும் சுட்டெரித்தது. தொடர்ந்து பெய்த மழையால் சாலைகளில் உள்ள பள்ளங்களிலும், சாலையோர பள்ளங்களிலும் மழைநீர் தேங்கி நின்றது. இதுதவிர தாழ்வான குடியிருப்பு பகுதிகளிலும் மழைநீர் தேங்கி

நின்றதை காண முடிந்தது. கடலூர் உழவர்சந்தை சேறும், சகதியுமாக மாறியது. அதன்பிறகு பகல் 12 மணிக்கு கடும் வெயில் கொளுத்தியது. இதனால் தாழ்வான இடங்களில் உள்ள மழைநீர் வடிய ஆரம்பித்தது.

இந்த நிலையில் கடலூரில் மாலை 5 மணிக்கு மேல் கருமேகங்கள் வானில் சூழ்ந்து பலத்த காற்றுடன் கனமழை கொட்டியது. இதே போல், சிதம்பரம் பகுதியிலும் காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை மழை விட்டு விட்டு பெய்தது. அதன் பின்னர் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் மதியம் 3 மணிக்கு மீண்டும் மழை பெய்தது.

அதே போல பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோவில், அண்ணாமலை நகர், விருத்தாசலம் பகுதிகளிலும் விட்டு விட்டு மழை பெய்தது. திட்டக்குடி பகுதியில் நேற்று பலத்த மழை பெய்தது.

மழை அளவு

இருப்பினும் மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 7 மில்லி மீட்டர் மழை பெய்தது. இதற்கு அடுத்ததாக கடலூரில் 2.80 மில்லி மீட்டர் மழையும், காட்டுமன்னார்கோவிலில் 2 மில்லி மீட்டர் மழையும், சிதம்பரத்தில் 0.50 மில்லி மீட்டர் மழையும், அண்ணாமலைநகரில் 0.20 மில்லி மீட்டர் மழையும் பதிவானது.

இன்று விடுமுறை இந்த நிலையில் கடலூர் மாவட்டம் முழுவதும் நேற்று முதல் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதையடுத்து கடலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கும் இன்று(திங்கட்கிழமை) விடுமுறை விடப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை கடலூர் மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் பிறப்பித்துள்ளார்.

## தொடர் மழையால் சாமந்திப்பூக்கள் விளைச்சல் அமோகம் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை



நல்லம்பள்ளி

தொடர் மழையால் மாவட்டத்தில் சாமந்திப்பூக்கள் விளைச்சல் அதிகரிப்பால் பூக்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சாமந்திப்பூக்கள் அறுவடை

தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி, தொப்பூர், முத்தம்பட்டி, பொம்மிடி, பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு, பென்னாகரம் உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் சாமந்திப்பூக்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த மாவட்டத்தில் போதிய மழை இல்லாத காரணத்தாலும், பருவமழைகள் பொய்த்து போனதாலும் சாமந்திப்பூக்கள் நடவுப்பணிகள் தாமதமாக நடைபெற்றது.

இதன் காரணமாக அறுவடைக்கு வரவேண்டிய சாமந்திப்பூக்கள் தாமதமாக தற்போது அறுவடைக்கு வந்துள்ளது. அக்டோபர் முதல் வாரத்தில் அறுவடை செய்யப்பட்டு இருந்தால் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை மற்றும் தசரா திருவிழா காலங்களில் நல்ல விலைக்கு பூக்கள் விற்கப்பட்டு இருக்கும். மாவட்டம் முழுவதும் சாமந்திப்பூக்கள் விளைச்சல் அமோகமாக இருந்தாலும் பூக்களின் விலை குறைவாக உள்ளது.

விவசாயிகள் கவலை

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், நல்லம்பள்ளி, தொப்பூர், பொம்மிடி பகுதிகளில் சாமந்திப்பூக்கள் விளைச்சல் அமோகமாக உள்ளது. சமீபத்தில் பெய்த தொடர் மழையால் சாமந்திப்பூக்கள் அறுவடை செய்யும் பணி பாதிக்கப்பட்டுள்ளது. தோட்டங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் சாமந்தி செடிகள் தண்ணீரில் அழுகி காணப்படுகிறது. விவசாயிகள் பூக்களை அறுவடை செய்து விற்பனைக்கு கொண்டு சென்றாலும் போதிய விலை கிடைப்பதில்லை. தற்போது ஒரு கிலோ சாமந்திப்பூ ரூ.60 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஆண்டு நிலையான விலை இல்லாத காரணத்தால் சாமந்திப்பூக்கள் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மேலும் சாமந்திப்பூக்கள் சாகுபடி செய்ய விவசாயிகள் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், அறுவடை கூலி உள்ளிட்ட செலவுகளை ஈடுகட்ட முடியவில்லை. எனவே தர்மபுரி மாவட்ட நிர்வாகம் பூ விவசாயிகள் கூட்டுறவு சங்கத்தை அமைத்து அதன் மூலம் நிலையான கொள்முதல் விலையை பூக்களுக்கு நிர்ணயிக்க வேண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பயிர்சேதத்திற்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்



தர்மபுரியில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் விவேகானந்தன் பேசியபோது எடுத்தபடம்.

தொடர்மழையால் ஏற்பட்ட பயிர்சேதத்திற்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தர்மபுரியில் நடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினார்கள்.

குறைதீர்க்கும் கூட்டம்

தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர்(பொறுப்பு) வெங்கடேசன் வரவேற்று பேசினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சங்கர், திட்ட அலுவலர் ஸ்ரீதர், உதவி கலெக்டர்கள் ராமமூர்த்தி, கவிதா, கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குனர்கள் கவிதா, துர்க்காமூர்த்தி மற்றும் வேளாண்மை, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசியதாவது:-

தர்மபுரி மாவட்டத்தில் அண்மையில் பெய்த தொடர்மழையால் பல பகுதிகளில் பயிர்சேதம் ஏற்பட்டு உள்ளது. குறிப்பாக நெல்,மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, பருத்தி, சாமை ஆகிய பயிர்கள் அதிக அளவில் சேதமடைந்து உள்ளன. பல இடங்களில் கால்நடைகள் உயிரிழந்து உள்ளன. பயிர்சேதம் குறித்து அதிகாரிகள் கள ஆய்வு நடத்தி உண்மையான பாதிப்பின் அளவை கண்டறிந்து அதற்கேற்ப நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தூர்வார நடவடிக்கை

தேசிய ஊரக வேலைஉறுதிதிட்ட தொழிலாளர்களை விவசாய பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும். தர்மபுரி மாவட்டத்தில் விவசாயத்திற்கான மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்துள்ள 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரூர் அருகே சின்னம்மன் ஏரி, பெரியம்மன் ஏரி ஆகியவை உள்பட மாவட்டத்தில் தண்ணீர் வரத்து இல்லாத ஏரிகளை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும். தூர்வாரும் பணியின்போது கிடைக்கும் வண்டல் மண்ணை விவசாய பணிகளுக்கு பயன்படுத்த விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். ஏலகிரி பகுதியில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் ஆடு,மாடுகளை மேய்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பவை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் விவசாயிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டன. இந்த கூட்டத்தில் கலெக்டர் விவேகானந்தன் பேசுகையில், தர்மபுரி மாவட்டத்தில் பயிர்ச்சேத பாதிப்புகளை கண்டறிய ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 10 அலுவலர்கள் நியமிக்கப்பட்டு கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் விடுபட்ட விவசாயிகளை களஆய்வு மூலம் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார். இந்த கூட்டத்தில் விவசாய சங்க நிர்வாகிகள், விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல்லில் காய்கறிகள் விலை கிடுகிடு உயர்வு



திண்டுக்கல்

திண்டுக்கல்லில், காய்கறிகள் விலை ‘கிடுகிடு‘ வென உயர்ந்து வருகிறது. வரத்து குறைவால் அவரைக்காய் ஒரு கிலோ ரூ.90–க்கு நேற்று விற்பனை செய்யப்பட்டது.

<u>காந்தி மார்க்கெட்</u>

திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டுக்கு, திண்டுக்கல்லை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் இருந்து கத்தரிக்காய், வெண்டைக்காய் உள்பட பல்வேறு காய்கறிகளும், கொடைக்கானல், சிறுமலை போன்ற மலைப்பகுதியில் இருந்து கேரட், முட்டைக்கோஸ், பீட்ரூட் போன்ற காய்கறிகளும் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. நாள்தோறும் வரத்தினை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படுவது வழக்கம்.

இந்த நிலையில் திண்டுக்கல்லில் கடந்த சில நாட்களாக காய்கறிகள் விலை ‘கிடுகிடு‘ வென உயர்ந்து வருகிறது. இதனால் கத்தரிக்காய் ஒரு கிலோ ரூ.80 முதல் ரூ.90 வரையிலும், முருங்கைக்காய் ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரையிலும், அவரைக்காய் ஒரு கிலோ ரூ.70 முதல் ரூ.90 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து காய்கறி வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

<u>வரத்து குறைந்ததால்...</u>

தீபாவளிக்கு பிறகு கத்தரிக்காய், முருங்கைக்காய் உள்பட பல்வேறு காய்கறிகள் வரத்து குறைந்துள்ளது. தொடர் மழையால் சாகுபடி செய்யப்பட்ட காய்கறி செடிகள் அழிந்து விட்டன. அதுமட்டுமின்றி கார்த்திகை, மார்கழி மாதங்களில் ஏராளமானவர்கள் அய்யப்பன், முருகன் சுவாமிக்கு மாலை அணிந்து விரதத்தை கடைபிடித்து வருகிறார்கள்.

இதனால் காய்கறிகளின் தேவை அதிகரித்துள்ளது. இதையொட்டி விலை உயர்ந்து உள்ளது. வருகிற தை மாதம் வரையிலும் காய்கறிகளின் விலை இதே நிலவரத்தில் இருக்கும். அதன்பிறகு விலை குறைய வாய்ப்பிருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

<u>மற்ற காய்கறிகள்</u>

திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் வெண்டைக்காய், கேரட், கருணைக்கிழங்கு, பாகற்காய் ஆகியவை தலா ஒரு கிலோ ரூ.40–க்கும், பீன்ஸ் ஒரு கிலோ ரூ.90–

க்கும், இஞ்சி ஒரு கிலோ ரூ.50–க்கும், பச்சை மிளகாய் ஒரு கிலோ ரூ.35–க்கும், கேரட், பீட்ரூட் ஆகியவை தலா ஒரு கிலோ ரூ.20–க்கும், தக்காளி ரூ.30–க்கும், சேனைக்கிழங்கு ரூ.35–க்கும் நேற்று விற்பனை ஆனது.

## கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் ரூ.7¾ லட்சத்துக்கு வாழைப்பழம் விற்பனை



கோபி

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் ரூ.7¾ லட்சத்துக்கு வாழைப்பழங்கள் விற்பனை ஆனது.

<u>வாழைப்பழத்தார்கள்</u>

கோபி மொடச்சூர் ரோட்டில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தில் வாரம்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் வாழைப்பழத்தார், தேங்காய் ஏலம் நடைபெறும். அதன்படி நேற்று முன்தினம் ஏலம் நடந்தது.

வாழைப்பழ ஏலத்துக்கு ஈரோடு, கோவை, திருப்பூர், புஞ்சைபுளியம்பட்டி, பெருந்துறை, அந்தியூர், பவானி, குன்னத்தூர் உள்பட பல்வேறு பகுதிகளை

சேர்ந்த 100–க்கும் மேற்பட்ட விவசாயிகள் 10 ஆயிரம் வாழைப்பழத்தார்களை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

ரூ.7¾ லட்சத்துக்கு விற்பனை

இதில் கதலி வாழைப்பழம் (கிலோ) ரூ.22–க்கும், நேந்திரம் வாழைப்பழம் ரூ.17–க்கும் ஏலம் போனது. ரொபஸ்டா வாழைப்பழம் (தார்) ரூ.130–க்கும், தேன்வாழை ரூ.375–க்கும், பூவன் ரூ.200–க்கும், மொந்தன் ரூ.100–க்கும், பச்சைநாடன் ரூ.200–க்கும், ரஸ்தாளி ரூ.320–க்கும், செவ்வாழை ரூ.580–க்கும் ஏலம் போனது. வாழைப்பழம் மொத்தம் ரூ.7 லட்சத்து 80 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது.

இதேபோல் நடந்த தேங்காய் ஏலத்துக்கு கோபி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 10 ஆயிரம் தேங்காயை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் தேங்காய் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.7–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.14–க்கும் என மொத்தம் ரூ.85 ஆயிரத்துக்கு ஏலம் போனது. வாழைப்பழம் மற்றும் தேங்காய்களை கோபி, ஈரோடு, சத்தியமங்கலம் உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச்சென்றனர்.

## கரூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் நிலவேம்பு கசாயம் வினியோகம் கலெக்டர் ஜெயந்தி தொடங்கி வைத்தார்



கரூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் நிலவேம்பு கசாயம் வினியோகத்தை கலெக்டர் ஜெயந்தி தொடங்கி வைத்தார்.

நிலவேம்பு கசாயம்

கரூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், மாவட்ட சித்த மருத்துவத்துறை சார்பில் பொதுமக்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கும் சிறப்பு முகாம் தொடக்க விழா நேற்று நடந்தது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்து அரசு மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

9 வகையான மூலிகை பொருட்கள்

முதல்-அமைச்சர், மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இன்று(நேற்று) முதல் வருகிற 29-ந்தேதி வரை நில வேம்பு கசாயம் பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் சிறப்பு முகாம்கள் நடத்த உத்தரவிட்டு உள்ளார். அதன்படி மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்ள சித்த மருத்துவத்துறையின் கீழ் நிலவேம்பு கசாயம்வழங்கும் சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கப்பட்டு உள்ளது.

9 வகையான மூலிகை பொருட்கள் சேர்த்து நில வேம்பு கசாயம் தயார் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. மழைக்காலங்களில் தொற்றுநோய்களை கட்டுப்படுத்தும் வகையில் மாவட்டத்தில் தலைமை மருத்துவமனை மற்றும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வழங்கப்படுகிறது. இதன்மூலம் தொற்றுநோய்கள் பரவுவது கட்டுப்படுத்தப்படும்.

அனைத்து பொதுமக்களும் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு சென்று நிலவேம்பு கசாயத்தை இலவசமாக பருகி காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்களில் இருந்து தங்களை காத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

முகாமில் காமராஜ் எம்.எல்.ஏ., மருத்துவத்துறை இணை இயக்குனர் டாக்டர் சந்திரன், பொது சுகாதாரத்துறை துணை இயக்குனர் டாக்டர் நளினி, கண்காணிப்பு அலுவலர் டாக்டர் ராஜேந்திரன், கரூர் நகர்மன்ற தலைவர்

செல்வராஜ், துணை தலைவர் காளியப்பன், கரூர் ஒன்றியக்குழு தலைவர் திருவிகா, கரூர் நகர அ.திமு.க. செயலாளர் நெடுஞ்செழியன் உள்பட அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாய பயிர்களுக்கு இழப்பீடு வழங்க உடனடி நடவடிக்கை கலெக்டர் ராஜேஷ் தகவல்



மழையால் பாதிக்கப்பட்ட விவசாய பயிர்களுக்கு இழப்பீடு வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கலெக்டர் ராஜேஷ் கூறினார்.

குறை தீர்க்கும் கூட்டம்

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதற்கு கலெக்டர் ராஜேஷ் தலைமை தாங்கினார். கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களின் கோரிக்கைகளை தெரிவித்தனர்.

கூட்டத்தில் நேரலட்டியைச் சேர்ந்த விவசாயி நாராயணப்பா பேசும் போது,

கால்நடைகளுக்கான தீவனத்தில் மணல் கலப்படம் செய்யப்படுவதால் கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. சில கால்நடைகள் உயிரிழக்கும் அபாயமும் உள்ளது என்றார். மொல்லம்பட்டியைச் சேர்ந்த விவசாயி மகராஜன் பேசும் போது., விவசாய கருவிகள் பெற உரிய கட்டணம் செலுத்திய பிறகும் இதுவரை கருவிகள் வழங்கப்படவில்லை என்றார். அதே போல சோலார் பம்பு செட் வழங்க வேண்டும் என்று கொத்தூரைச் சேர்ந்த விவசாயி ஜெயராமன் வலியுறுத்தினார்.

காப்பீட்டுத்தொகை

எடவனஅள்ளியைச் சேர்ந்த விவசாயி மாதன் பேசும் போது, பசுமை குடில் அமைத்து விவசாயம் செய்து வந்தோம். தற்போது புயல் மழையால் அந்த பசுமை குடில் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது வங்கி அதிகாரிகள் கடனை திரும்ப செலுத்த வலியுறுத்துகிறார்கள். கடன் வழங்கும் போது காப்பீடுத்தொகையை பிடித்தம் செய்த அதிகாரிகள், காப்பீடுத்தொகையை பெற்று கடனை அடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கரகூரைச் சேர்ந்த விவசாயி ராமகவுண்டர் பேசும் போது, கூட்டுறவு பால் கொள்முதல் நிலையங்களில் தற்போது முகவர்கள் மூலம் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, உற்பத்தியாளர்களிடம் இருந்து பாலை கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதலி செய்வதை உறுதிபடுத்த வேண்டும் என்றார்.

விவசாயி லோகாபிராம் பேசும் போது, துவரை பயிருக்கு தற்போது டி.ஏ.பி. கரைசல் தெளிக்கும் பருவம் என்பதால் தனியார் கடைகளில் மானிய விலைகளில் சில்லறை விற்பனையில் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும், மேலும் மாவட்டத்தில் டி.ஏ.பி. குறைந்த அளவே இருப்பில் உள்ளது என்றார்.

விவசாயிகளிடம் குறைகளை கேட்ட மாவட்ட கலெக்டர் ராஜேஷ் பேசியதாவது:-

உரிய இழப்பீடு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்த கனமழையால் 220 ஏரிகள் நிரம்பி உள்ளது. கிருஷ்ணகிரி அணையில் மதகில் ஏற்பட்ட பழுது சரி செய்யப்பட்டது. மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளில், நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும். நாகோஜனஅள்ளி பேரூராட்சியில் உள்ள ஏரி கரையை ஆக்கிரமித்து விவசாயம் செய்து வருபவர்களிடம் இருந்து ஏரியை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்டத்தில் தொடர் மழையால் 1,044 மில்லிமீட்டர் மழை பெய்து உள்ளது. இந்த மழைநீரை வீணாக்காமல் இருக்கவும், அவற்றை சேமிக்கவும் நீர்நிலைகளில் காணப்படும் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மழையால் பாதிக்கப்பட்ட விவசாய பயிர்களுக்கு இழப்பீடுகள் வழங்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு கலெக்டர் ராஜேஷ் பேசினார்.

## கோழிகளில் முட்டை ஓட்டின் தரம் குறைய வாய்ப்பு ஆராய்ச்சி நிலையம் தகவல்




கோழிகளில் முட்டை ஓட்டின் தரம் குறைய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

வானிலை அறிக்கை

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

இன்று முதல் 3 நாட்கள் வானம் நிறைந்த மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று (ஞாயிற்றுக்கிழமை) 10 மி.மீட்டரும், நாளை (திங்கட்கிழமை) 9 மி.மீட்டரும், நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) 5 மி.மீட்டரும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

காற்று இன்றும், நாளையும் மணிக்கு 4 கி.மீ.வேகத்திலும், நாளை மறுநாள் 5 கி.மீ.வேகத்திலும் வடகிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக இன்று 87.8 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 86 டிகிரியாகவும் இருக்கும். குறைந்தபட்சமாக இன்று 73.4

டிகிரியாகவும், நாளை மற்றும் நாளைமறுநாள் 71.6 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 84, 86, 89 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 62, 64, 72 சதவீதமாகவும் இருக்கும்.

சிறப்பு வானிலை

வடகிழக்கு பருவமழையின் தாக்கம் தற்காலிகமாக குறைந்து உள்ளதால், மிதமான வெயிலும், லேசான மேகமூட்டமும் கொண்ட வானிலை நிலவும். அதன் காரணமாக கோழிகளில் தீவன எடுப்பு இயல்பான அளவு மற்றும் அதற்கு சற்று உயர்ந்தும் காணப்படும். இன்று முதல், வடகிழக்கு பருவமழை கடலோர மாவட்டங்களில் தீவிரமடையும் வாய்ப்பு உள்ளதால், உள் மாவட்டமான நாமக்கல்லிலும், லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது. அதன் காரணமாக தீவன எடுப்பு அதிகரிக்கும். முட்டை எடை கூடும். முட்டை எடை கூடும் சமயத்தில் முட்டை ஓட்டின் தரம் குறைய வாய்ப்பு உள்ளது.

பகல் வெளிச்ச கால அளவும் குறையும் என்பதால், தீவனத்தில் எரிசக்தி தேவையான அளவில் இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும்.

கடந்த வாரம் கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகளில் பெரும்பாலானவை குடற்புண் மற்றும் ரத்த கழிச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு, இறப்பு ஏற்பட்டு உள்ளது.

எனவே பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனத்தில் கிளாஸ்ட்டியம் கிருமியின் தாக்கம் உள்ளதா? என ஆய்வகத்தில் பரிசோதனை செய்து, அதற்கு ஏற்றாற்போல், தீவன மேலாண்மை மற்றும் உயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வடகிழக்கு பருவமழை எதிரொலி: காட்டேரி பூங்காவில் அழுகிய மலர் செடிகள் அகற்றும் பணி மும்முரம் சுற்றுலா பயணிகளை கவர புதிய செடிகளும் நடப்படுகின்றன



குன்னூர்

வடகிழக்கு பருவமழை காரணமாக காட்டேரி பூங்காவில் அழுகிய மலர் செடிகளை அகற்றும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. மேலும் சுற்றுலா பயணிகளை கவர புதிய செடிகளும் நடப்படுகின்றன.

<u>காட்டேரி பூங்கா</u>

குன்னூர்–மேட்டுப்பாளையம் சாலையில் குன்னூரில் இருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் காட்டேரி பூங்கா அமைந்து உள்ளது. இந்த பூங்கா தோட்டக்கலை துறைக்கு சொந்தமானது. சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த பூங்கா இயற்கை எழில் சூழ காட்சி தருகிறது.

பூங்காவின் கீழ்புறம் ரன்னிமேடு ரெயில் நிலையம் அமைந்து உள்ளது. இதனால் மலை ரெயிலில் வரும் சுற்றுலா பயணிகளும், குன்னூர்–மேட்டுப்பாளையம் சாலை வழியாக வரும் சுற்றுலா பயணிகளும் இந்த பூங்காவை கண்டு களிக்கும் வகையில் இந்த பூங்கா காணப்படுகிறது.

அழுகிய செடிகள்

நீலகிரி 2–வது சீசனுக்காக சுமார் ஒரு லட்சம் மலர் நாற்றுகள் இந்த பூங்காவில் நடவு செய்யப்பட்டது. இந்த நாற்றுகளில் மலர்கள் பூத்து மலர்ந்து காணப்பட்டது. ஊட்டிக்கு சுற்றுலா வந்த பெரும்பாலான பயணிகள் இந்த காட்டேரி பூங்காவுக்கு வந்து பூத்து மலர்ந்த பூக்களை கண்டு ரசித்ததோடு புகைப்படமும் எடுத்து கொண்டனர்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் வடகிழக்கு பருவமழை பெய்தது. நீலகிரி மாவட்டத்தில் அதிக அளவு மழை குன்னூரில் தான் பெய்து உள்ளது என்று புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. தொடர் மழையால் காட்டேரி பூங்காவில் பூத்து இருந்த ஏராளமான மலர்கள் அழுகி விட்டன. அது மட்டுமின்றி மலர்களின் ஓரத்தில் நடவு செய்யப்பட்டு இருந்த அலங்கார செடிகளும் அழுகி காணப்பட்டன. இதை தொடர்ந்து அழுகிய மலர் செடிகள், அலங்கார செடிகளை அகற்ற தோட்டக்கலைத்துறை நிர்வாகம் முடிவு செய்தது.

இதன் அடிப்படையில் தற்போது தொழிலாளர்கள் பூங்காவில் அழுகிய நிலையில் காணப்படும் மலர் செடி, அலங்கார செடிகளை வேரோடு பிடுங்கி அகற்றும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

புதிய செடிகள் நடவு

அதே நேரத்தில் ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் விதத்தில் காலியான இடத்தில் பல்வேறு விதமான மலர் செடிகளை நடவு செய்யும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. இது குறித்து தோட்டக்கலை துறை அதிகாரி ஒருவர் கூறும் போது:–

வருகிற ஏப்ரல், மே மாத சீசனை கருத்தில் கொண்டு புதிய செடிகளை நடவு செய்து வருகிறோம். அழுகிய செடிகளை அப்புறப்படுத்தும் பணியும் நடைபெற்று வருகிறது. ஊட்டிக்கு சுற்றுலா வரும் பயணிகளை கவரும் பொருட்டு பூங்காவில் பல்வேறு விதமான அலங்கார செடிகளும் நடவு செய்யப்பட்டு உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

## பொள்ளாச்சியில் மீன்களின் விற்பனை சரிவு



பொள்ளாச்சி

பொள்ளாச்சியில் மீன்களின் விற்பனை சரிவடைந்து உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

<u>மீன்கடை</u>

பொள்ளாச்சி பகுதிக்கு ராமேஸ்வரம், பாம்பன், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கடலூர் ஆகிய பகுதிகளில் இருந்தும், ஆழியாறு, அமராவதி, மேட்டூர், பவானியில் இருந்தும் மீன்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன.

பொள்ளாச்சியில் ராஜாமில்ரோடு, காந்திமார்க்கெட், பல்லடம் ரோடு, அய்யப்பன்கோவில் வீதி உள்பட பல்வேறு இடங்களில் கடைகள் அமைக்கப்பட்டு வியாபாரிகள் மீன்களை விற்பனை செய்து வருகிறார்கள். தற்போது கார்த்திகை மாதம் என்பதால் மீன்களின் வரத்து குறைவடைந்து உள்ளது. மேலும், மீன்களின் விலையும் சரிவடைந்து உள்ளது. இதுகுறித்து மீன்வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

<u>வரத்து குறைவு</u>

பொள்ளாச்சியில் தினமும் சராசரியாக 4 டன் முதல் 5 டன் வரை மீன்கள் விற்பனை செய்யப்படும். ஆனால் தற்போது கார்த்திகை மாதம் என்பதால் ஏராளமானோர் அய்யப்பன் கோவிலுக்கு மாலை அணிந்து உள்ளனர். இதனால்

விற்பனை சரிவடைந்து உள்ளது. மேலும், மீன்களின் வரத்து தற்போது 2 டன் குறைந்து உள்ளது. இதேபோல் மீன்களின் விலை கடந்த மாதத்தை விட தற்போது ரூ.30 முதல் ரூ.40 வரை குறைந்து உள்ளது.

பொள்ளாச்சியில் நேற்று விற்பனை செய்யப்பட்ட மீன்களின் விலை விவரம் (கிலோவுக்கு) வருமாறு:–

கட்லா ரூ.150, ரோகு ரூ.150, ஷீலா ரூ.150, வஞ்சரம் ரூ.400, பாறை ரூ.300, மாவுலா ரூ.250 முதல் ரூ.300, அயிலை ரூ.140, நெத்திலி ரூ.150–ல் இருந்து ரூ.250, நண்டு ரூ.220, இறால் ரூ.300–ல் இருந்து ரூ. 400 வரை விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

## வால்பாறையில் போதிய மழை பெய்யாததால் சோலையார் அணையின் நீர்மட்டம் 85 அடியாக குறைந்தது கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்



வால்பாறை

வால்பாறையில் போதிய மழை பெய்யாததால் சோலையார் அணையின் நீர்மட்டம் 85 அடியாக குறைந்து உள்ளது. இதனால் கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

<u>வடகிழக்கு பருவமழை</u>

வால்பாறை பகுதியில் கடந்த ஜூன் மாதம் 3–ந் தேதி முதல் தென்மேற்கு பருவமழை பெய்தது. ஆனால் எதிர்பார்த்த அளவு பருவமழை பெய்யவில்லை. இதனால் பரம்பிக்குளம்– ஆழியார் திட்டத்தின் அடிப்படை அணைகளான சோலையார் அணை, நீரார் அணை, சின்னக்கல்லார் அணைகளுக்கு போதியளவு தண்ணீர் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை தமிழகத்தின் பல்வேறு இடங்களில் மீண்டும் தீவிரம் அடைந்தாலும் கோவை மாவட்டம் வால்பாறை மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதிகளில் போதிய மழை பெய்யாததால் சோலையார் அணையின் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைவடைந்து வருகிறது. மேலும், சோலையார் அணைக்கு தண்ணீர் வரத்தை ஏற்படுத்தி தரும் கூழாங்கல் ஆற்றிலும் தண்ணீர் வரத்து பெருமளவில் குறைந்து உள்ளது.

<u>சோலையார் அணை</u>

சோலையார் அணையில் கடந்த 17–ந் தேதி 99 அடி தண்ணீர் இருப்பு இருந்தது. ஆனால் தற்போது அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி சோலையார் அணையில் 85.97 அடி மட்டுமே தண்ணீர் இருப்பு உள்ளது. மேலும், வினாடிக்கு 213 கனஅடி தண்ணீர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. சோலையார் மின்நிலையத்தில் உள்ள 2 மின்உற்பத்தி மோட்டார்களில் ஒன்று மட்டுமே இயக்கப்பட்டு 35 மெகாவாட் மின்சாரம் தினமும் உற்பத்தி செய்யப்பட்டு 771 கன அடித்தண்ணீர் பரம்பிக்குளம் அணைக்கு திறந்து விடப்பட்டு வருகிறது.

வால்பாறையில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை சரிவர பெய்யவில்லை. இதனால் கோடைகாலத்தில் வால்பாறை மற்றும் பொள்ளாச்சி, ஆனைமலை உள்ளிட்ட சமவெளிப்பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு மற்றும் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் திறந்துவிடுவதில் சிக்கல் ஏற்படும் நிலை ஏற்பட்டு உள்ளது.

# பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் வரத்து அதிகரிப்பு



பொள்ளாச்சி

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் வரத்து அதிகரித்ததால் கடந்த வார விலையிலேயே ஏலம் சென்றது.

வாழைத்தார் ஏலம்

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. ஏலத்துக்கு ஆனைமலை, அம்பரம்பாளையம், கிணத்துக்கடவு, சுல்தான்பேட்டை, தஞ்சாவூர், தூத்துக்குடி உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள். இவற்றை உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் ஏலம் மூலம் வாங்கி சென்று விற்பனை செய்கிறார்கள். நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாழைத்தார் ஏலம் நடைபெற்றது.

ஏலத்துக்கு மொத்தம் 2 ஆயிரம் வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. இதில் பூவந்தார் ஒன்று ரூ.100 முதல் ரூ.300 வரைக்கும், கற்பூரவள்ளி ரூ.150 முதல் ரூ.450 வரைக்கும், மோரீஸ் ரூ.100 முதல் ரூ.200 வரைக்கும், செவ்வாழை

ரூ.300 முதல் ரூ.800 வரைக்கும், நேந்திரம் ஒரு கிலோ ரூ.18–க்கும், கதளி ஒரு கிலோ ரூ.17–க்கும் ஏலம் சென்றது. இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:–

<u>அய்யப்ப பக்தர்கள்</u>

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு கடந்த வாரம் 1500 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. ஆனால் இந்த வாரம் வரத்து அதிகரித்து 2 ஆயிரம் தார்கள் வந்து உள்ளன. சபரிமலைக்கு அய்யப்ப பக்தர்கள் மாலை அணிந்து இருப்பதால் தினமும் ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு சென்று வருகிறார்கள்.

இதனால் வாழைப்பழங்களின் தேவை அதிகரித்து உள்ளது. இதனால் ஏராளமான வியாபாரிகள் வாழைத்தார்களை போட்டிபோட்டு ஏலம் எடுத்தனர். இருப்பினும் கடந்த வார விலையிலேயே வாழைத்தார்கள் ஏலம் சென்றன.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## மழையால் கடுமையாக உயர்ந்த காய்கறிகள் விலை குறைகிறது ரூ.110–க்கு விற்ற கத்தரிக்காய் ரூ.90–க்கு விற்பனை



கோவை,

மழையால் கடுமையாக உயர்ந்த காய்கறிவிலை மெல்ல, மெல்ல குறைகிறது. ரூ.110–க்கு விற்ற கத்தரிக்காய் ரூ.90–க்கு விற்பனையாகிறது.

பெரியவெங் காயம் வரத்து

கோவையில் உள்ள காய்கறி மார்க்கெட்டுகள், மற்றும் தனியார் காய்கறி நிலையங்களில் கடந்த ஒருவார காலமாக காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கோவை மேட்டுப்பாளையம்ரோட்டில் உள்ள மொத்த மார்க்கெட்டுக்கு வடமாநிலங்களில் இருந்து பெரிய வெங்காயமும், உள்ளூர் பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயமும் வருகிறது. அங்கிருந்து சில்லறை விற்பனைக்காக வியாபாரிகள் வெங்காயத்தை வாங்கிச்செல்கின்றனர். இது தவிர கோவையில் உள்ள காய்கறி மார்க்கெட்டுகளுக்கு ஊட்டியில் இருந்து உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், பீன்ஸ் ஆகியவை அதிகளவில் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

<u>பொதுமக்கள் கவலை</u>

மேட்டுப்பாளையத்தில் உருளைக்கிழங்கு மொத்த விற்பனை மண்டிகள் உள்ளன. அங்கிருந்து கோவை மார்க்கெட்டுகளுக்கு உருளைக்கிழங்கு லோடுகள் லாரிகளில் ஏற்றப்பட்டு கொண்டுவரப்படுகின்றன. இதனால் தினசரி காலை, மாலை வேளைகளில் கோவை மார்க்கெட்டுகளில் காய்கறி வாங்குவதற்கு பொதுமக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

பொதுவாக வீடுகளில் தினசரி சமையலுக்கு கத்தரி, தக்காளி, பச்சை மிளகாய் பயன்பாடு அதிகம் உள்ளதால், இந்த காய்கறிகள் அத்தியாவசிய காய்கறிகளாக உள்ளன. ஆனால் சமீபத்தில் இந்த காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் பொதுமக்கள் கவலை அடைந்துள்ளனர். தற்போது மார்க்கெட்டுகளில் கிலோவுக்கு பெரிய வெங்காயம்– ரூ.37, சின்ன வெங்காயம்–ரூ.56, கத்தரிக்காய்–ரூ.90, பச்சை மிளகாய்–ரூ.40, பீன்ஸ்–58, பீட்ரூட்–26, கேரட்–ரூ.47, அவரைக்காய்–ரூ.78, பீர்க்கங்காய்–ரூ.39, பாகற்காய்–ரூ.35, வெண்டைக்காய்–ரூ.50, புடலங்காய் –ரூ.38, சுரைக்காய்–ரூ.29, வாழைக்காய்–ரூ.25 என விற்பனையாகிறது.

<u>விளைச்சல் குறைவு</u>

இது குறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

கோவை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக பெய்த மழைகாரணமாக, விவசாய பயிர் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டு, தினசரி மார்க்கெட்டுகளுக்கு வருகின்ற காய்கறி வரத்து குறைந்தது. இதனால் விலை அதிகரித்தது. ஆனால் விளைச்சல் அதிகமாகும்போது, காய்கறி விற்பனையில் சூடுபிடிப்பதில்லை. காய்கறிகள் தேக்கம் அடைகின்றன. இதனால் தக்காளி, கத்தரி போன்ற காய்கறிகள் கிலோவுக்கு ரூ.10–க்கு விற்பனையாவது வாடிக்கையாக உள்ளது. ஆனால் நடப்பு மாதத்தில் உள்ளூர் விளைச்சல் குறைந்துள்ளதால் கத்தரிக்காய் விலை அசுர வேகத்தில் அதிகரித்தது. இது கடந்த சில நாட்களுக்கு முன்பு ரூ.110 வரையிலும், தக்காளி கடந்த சில நாட்களுக்கு முன்பு கிலோவுக்கு ரூ.55 வரையிலும் இருந்தது.

<u>மழைநீடித்தால் விலை உயரும்</u>

இந்த நிலையில் மழை நின்று காணப்படுவதால், கடந்த 2 நாட்களாக காய்கறிகள் ரூ.5 முதல் ரூ.10 வரை மெல்ல, மெல்ல குறைந்து வருகிறது. தற்போது கத்தரிக்காய் கிலோவுக்கு ரூ.90 ஆக உள்ளது. தக்காளி ரூ.40 முதல் ரூ.45 வரை விற்பனையாகிறது. இன்னும் சில நாட்களில் காய்கறி விலைகள் கணிசமாக குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் மழை நீடித்தால் மீண்டும் விலை உயருவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு அவர்கூறினார்.

<u>ஆரஞ்சுப்பழம் வரத்து அதிகரிப்பு</u>

இதுபோல் கோவைக்கு தற்போது சிம்லா, காஷ்மீர் ஆப்பிள் பழங்கள் வரத்து அதிகரித்து உள்ளது. ஆனால் விலை குறையவில்லை. சிம்லா ஆப்பிள் பழம் கிலோவுக்கு ரூ.100 முதல் ரூ.120 வரை விற்பனையாகிறது. காஷ்மீர் ஆப்பிள் கிலோவுக்கு ரூ.100 வரை விற்பனையாகிறது. ஆனால் மராட்டியத்தில் இருந்து ஆரஞ்சு பழங்கள் வரத்து வழக்கத்தை விட அதிகரித்துள்ளது. இதனால் மொத்த மார்க்கெட்டில் ஆரஞ்சு பழங்கள் விலை குறைந்து கிலோ ரூ.20–க்கு விற்பனையாகிறது என்று வியாபாரி ஒருவர் கூறினார்.

**கனமழை பாதிப்பை தெரிவிக்க தொலைபேசி எண்கள்: கடலூர் ஆட்சியர் அறிவிப்பு!**

**கடலூர்:** கனமழையை சமாளிக்கும் வகையில் வட்டம் வாரியாக அமைக்கப்பட்ட குழுவினரின் தொலைபேசி எண்களை கடலூர் மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ளார்.



இது தொடர்பாக கடலூர் ஆட்சியர் சுரேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "கடலூர் மாவட்டத்தில் கடந்த நவம்பர் 8-ம் தேதி முதல் தொடர் மழை பெய்து வருகிறது. நவம்பர் 29-ம் தேதி முதல் சில தினங்களுக்கு மிக கனமழை எதிர்நோக்கப்படுகிறது. இந்த மழைக்காலத்தில் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடவும், சட்டம் ஒழுங்கு பிரச்னைகள் எழாவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளவும் மழை நிவாரணம் தொடர்பான கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் தனியாக குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, கடலூர் வட்டத்திற்குட்பட்ட மஞ்சக்குப்பம் குறுவட்டத்திற்கு வட்டாட்சியர் பன்னீர்செல்வம் நியமிக்கப்பட்டுள்ளார். இவரை 9842939371 என்ற எண்ணில் தொடர்புக் கொள்ளலாம். திருவந்திபுரம் குறுவட்டத்தினர்,

டாஸ்மாக் வட்டாட்சியர் காந்தியை 9791552249, ஊரகப்பகுதியினர் தனித்துணை ஆட்சியர் மதிவாணனை 9655282200, நகராட்சியில் ஆணையர் ரா.முருகேசனை 9486526299, ரெட்டிச்சாவடி குறுவட்டத்தினர் தனி வட்டாட்சியர் ஜெயக்குமாரை 9095963241 என்ற எண்களில் தொடர்புக்கொள்ளலாம்.பண்ருட்டி குறுவட்டத்தினர் தனிவட்டாட்சியர் விஜயாவை 9994259454, ஊரகப்பகுதியினர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மாதவனை 9442181494, நகராட்சி பகுதியினர் ஆணையர் டி.பெருமாளை 9841090792, நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர்(பொ) சி.பாண்டுவை 9894979787, நெல்லிக்குப்பம் குறுவட்டத்தினர் தனிவட்டாட்சியர் செந்தில்குமாரை 9486085885, காடாம்புலியூர் குறுவட்டத்தினர் தனி வட்டாட்சியர் ரவிக்குமாரை 9442124696 என்ற எண்களில் தொடர்புக்கொள்ளலாம்.

குறிஞ்சிப்பாடி குறுவட்டத்தினர் மேலாளர் அரவிந்தை 9445029458, தனிவட்டாட்சியர் மகேஷை 9445045609, குள்ளஞ்சாவடி குறு வட்டத்தினர் தனித்துணை ஆட்சியர் தினேஷை 9442204939, தனி வட்டாட்சியர் சித்ராவை 9600968585 என்ற எண்ணில் தொடர்புக் கொள்ளலாம்.

சிதம்பரம் குறுவட்டத்தினர் தனி வட்டாட்சியர் அசோக்ராஜுவை 9843974766, ஊரகப்பகுதியினர் தனித்துணை ஆட்சியர் புன்னியகோட்டியை 9445464765, நகராட்சியினர் ஆணையர் (பொ) ஆர்.செல்வராஜை 9095079980, திருவக்குளம் குறுவட்டத்தினர் தனிவட்டாட்சியர் சிவகாமசுந்தரியை 9445000211, ஓரத்தூர் குறுவட்டத்தினர் தனிவட்டாட்சியர் கீதாவை 9486680820 என்ற எண்ணில் தொடர்புக் கொள்ளலாம். புவனகிரி குறுவட்டத்தினர் தனி வட்டாட்சியர் வி.எஸ்.மோகனை 9442291221, மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் வே.ஜவஹரை 9442204939, தனித்துணை ஆட்சியர் எம்.எஸ்.கோவிந்தனை 9486871320, பரங்கிப்பேட்டை குறுவட்டத்தினர் மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலக கண்காணிப்பாளர் தமிழ்செல்வியை 9789331129, சேத்தியாத்தோப்பு குறுவட்டத்தினர் தனி

வட்டாட்சியர் சரவணனை 9597796674 என்ற எண்ணில் தொடர்புக் கொள்ளலாம்.

காட்டுமன்னார்கோயில் ஊரகப்பகுதியினர் உதவி ஆணையர் குழந்தைவேலுவை 9842592876, தனித்துணை ஆட்சியர் என்.தனபாலை 7373924660, குமராட்சி குறுவட்டத்தினர் தனிவட்டாட்சியர் சீனுவாசனை 9442909899, உடையார்குடி குறுவட்டத்தினர் வட்ட வழங்கல் அலுவலர் ஆர்,பிரகாஷை 9445000212, புத்தூர் குறுவட்டத்தினர் துணை வட்டாட்சியர் வின்சென்ட்டை 9442889047, திருமுட்டம் குறுவட்டத்தினர் மண்டல துணைவட்டாட்சியர் எம்.செல்வராஜை 9487559503 தொடர்புக் கொள்ளலாம்.

விருத்தாசலம் வட்டம், கம்மாபுரம் (கிழக்கு) வட்டத்தினர் தனி வட்டாட்சியர் செல்லத்தங்கத்தை 9485788120, கம்மாபுரம் (மேற்கு) வட்டத்தினர் தனிவட்டாட்சியர் செல்வியம்மாளை 9688737000, ஊமங்கலம் வட்டத்தினர்

தனிவட்டாட்சியர் மகாராணியை 9943324223, விருத்தாசலம் (வ), (தெ) மற்றும் கோ.மங்கலம் வட்டத்தினர் கோட்டக் கலால் அலுவலர் கிருஷ்ணமூர்த்தியை 9443878783 , ஒருங்கிணைப்பாளர் நில எடுப்பு மாவட்ட வருவாய் அலுவலர் சந்திரசேகரனை 9443325754 என்ற எண்ணில் தொடர்புக் கொள்ளலாம்.

வேப்பூர் வட்டம், சிறுபாக்கம் குறுவட்டத்தினர் கமலாவை 9842730987 தொடர்புக் கொள்ளலாம். திட்டக்குடி வட்டம், திட்டக்குடி (கி), (மே) குறுவட்டத்தினர் தனி வட்டாட்சியர் ரத்னாவதியை 9442694909 தொடர்புக் கொள்ளலாம்" என்று தெரிவித்து உள்ளார்.